# என் மனைவி



பூங்கொடி பதிப்பகம்

லக்ஷ்மி

GEM CIRCULATIONG LIBRARY,
NO.11, PERUMAL KOIL NORTH MADA ST.
VILLIVAKKAM CHENNAI-49.
Book No. 1088A
Reading Charge 850 Upto 7-Days
Penalty Per Day 1.25

# என் மனைவி

## 1

மேகநாதன் வானத்தை அண்ணாந்து பார்த்தார். காலை முதல் கடுமையுடன் வீசிய கதிரவன், சட்டென கருந்திரைக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு விட்டதைப் போன்றதொரு மழை மூட்டம்.

தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் வார்ப்பதா வேண்டாமா? கையிலிருந்த பூவாளியால் லேசாக நீரை வார்த்து விட்டு உள்பக்கம் திரும்பினார்.

''மேகா! கோவிலுக்குக் கிளம்பலையா?'' அவரது பால்ய நண்பர் சுந்தரம் குரல் கொடுத்தபடி சிறிய வாயிற் கேட்டருகில் நின்று கொண்டிருந்தார். மேகநாதனைப் போல அவரும் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். காலை மாலை இருவேளையும் கைத்தடி சகிதம் வெளியே புறப்பட்டு விடுவார்...

வெள்ளிக் கம்பிகளாய் நரைத்த தலையும் கனத்த மூக்குக் கண்ணாடியுமாக அவர் வந்து நின்றபோது மேகநாதனுக்கு சிரிப்பு வந்தது. இருவரும் சம வயதினர்.

GEM CIRCULATING LIBRARY
Penalty Per Day

ஒரே அலுவலகத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர்கள். ஆனால் சுந்தரத்திற்கு சமீபத்தில் 'காட்ராக்ட்' ஆபரேஷன் ஆயிற்று.

''ஏன் மேகா! உன் கண் பார்வை மட்டும் அப்படியே இருக்கே'' என்பார் சுந்தரம்.

மேகநாதன் தன் உடலைப்பற்றி என்றைக்குமே கவலைப்பட்டதில்லை. அதிலும், கைக்குழந்தையான நரேந்திரனை விட்டுவிட்டு அவர் மனைவி திடும்மென இறந்தபோது எதிலுமே பற்றில்லாமல் வாழத் தெரிந்து கொண்டிருந்தார். ஆண்பிள்ளை வீட்டு வேலைகளைச் செய்வது தவறு என்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லை. சமையல்கலை முதல் தோட்டக்கலை வரை அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

''முதல்ல உன்னோட இடுப்பில் சுத்தி இருக்கற துண்டை மாத்தி, வேற நல்ல வேட்டியா கட்டிக்கிட்டு கோவிலுக்குப் புறப்படு'' சுந்தரம் உரிமையுடன் நண்பரை அதட்டியபடி அருகே வந்தார்.

உடைகள் விஷயத்திலும், மேகநாதன் அலட்சியம் காட்டி வந்தது சுந்தரத்திற்குத் தெரியும். அலுவலகத்திற்குப் பலமுறை இஸ்திரி செய்யப்படாத சட்டையைப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறார். கால் செருப்பின் வார் அறுந்து போனால்கூட, கவலைப்படாத பிறவி. ஆனால் வேலையில் மிகவும் கெட்டிக்காரர் என்பதற்காக அவர் மீது மேலதிகாரி பெரும் மதிப்பு வைத்துவிட்டிருந்தார். அவரது கம்பெனி முதலாளி கோசல்ராம் வட இந்தியர் என்றாலும், மொழி, மாகாணத்திற்கு அப்பாற்பட்ட ஒரு உயர்ந்த இடத்தில் மேகநாதனை வைத்து விட்டிருந்தார். எத்தனைக்கெத்தனை மேகநாதன் தம்மைப்பற்றி



அலட்சியமாக இருந்தாரோ அத்தனைக் கத்தனை அவரது உடல் ஆரோக்கியம் நன்கு செயல்பட்டுக் கொண்டிருந்தது.

சுந்தரத்திற்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும். காலாகாலத்தில் தம் கடமைகளை முடித்து விட்டு அவர் நிமிர்ந்தபோது மனைவி காலமாகி விட்டிருந்தாள். வேலையிலிருந்து ஓய்வுபெற்ற வேகத்தில் முதுமை முழுமையாக ஆட்கொண்டது. உடல் தளர்ந்து பிறர் கையை உதவிக்காக எதிர்பார்க்கும் நேரம் வந்து விட்டது. ஆனால் ஓடோடிச் செய்த மகளும், மகன்களும்? வயதாகி விட்டாலே ஒருவருக்கும் பிடிக்காமல் போய் விடுமோ... பெருமூச்செறிந்தபடி மேகநாதனைப் பார்த்தார்.

இவன் மட்டும் என்ன வாழ்ந்தான்? மனைவியின் மறைவுக்குப்பின், சமையற்கரண்டியைக் கையில் எடுத்தவன், இன்னமும் அதைக் கீழே வைத்தபாடில்லை. மகன் நரேந்திரன் அப்பா பிள்ளையாகத்தான் வளர்ந்தான், நன்றாகப் படித்தான். பிறகு...?

பக்கத்து அலுவலகத்தில் வேலை பார்க்கும் வானதிக்கு இருக்கும் கருணைகூட, சுகுணாவின் மனத்தில் இருக்கவில்லையே...

''மேல் நாட்டில் இருக்கறவங்க எண்பது வயசானாக் கூட, திடமா இருக்கணும், உழைக்கணும்னு ஓடியாடி வேலை செய்யறாங்க. நம்ம ஊர்ல, நாற்பது வயது தாண்டினதுமே 'வயசாச்சு முடியலை'ன்னு ஒரே ஒப்பாரி...'' அழுத்தம் திருத்தமாக அவள் கூறியபோது மனதில் 'சுரீர்' என வலி தைத்தது.

சதா ''அப்பா! நீங்க என்ன சொல்றீங்க'' என்று அவரிடம் அபிப்பிராயம் கேட்கும் மகன் நரேந்திரன்... எப்படி மாறிப் போய்விட்டான்!

உடையை மாற்றிக் கொண்டு வாயிற்பக்கம் வந்தவர், கதவைப் பூட்டுவதா வேண்டாமா என ஒரு கணம் தயங்கி நின்றார்.

''ஆபீஸ்ல இருந்து அலுத்துப் போய் வீடு திரும்பற சமயம், வீடு பூட்டிக் கிடக்குது'' மகன் மருமகள் இருவருமே அலுத்துக் கொள்வார்கள். இத்தனைக்கும் மூன்று பேர்களிடமும், மாற்றுச் சாவிகள் இருந்தன. ஆனாலும், மகனை விட, மருமகளுக்குக் கடும் கோபம் வந்துவிடும். ஏனெனில், வீடு திரும்பினதும், திரும்பாதது மாக சமையலறையில் புகுந்து கொள்ள வேணுமே!

''இன்னைக்கி மழையும் வந்துட்டா கேட்க வேணாம். மழையுடன் கூடிய இடியே வந்துடும் சுகுணாவின் பேச்சில்'' வானத்தை மீண்டும் பார்த்தார்.

''கையில் குடை வச்சிருக்கேன். வீட்டைப் பூட்டிட்டுக் கிளம்பு. அப்புறம் கோவில் வாசல்ல நம்ம கூட்டம் காத்துக்கிட்டிருக்கும்'' சுந்தரம் அவசரப் படுத்தினார்.

வாயிற்புற முன் கேட்டை சங்கிலியால் மூடியபடி தெருவில் நண்பருடன் இறங்கினார். பக்கத்து தெரு மூலையிலிருந்து பிள்ளையார் கோயிலை அடைந்தபோது மற்றவர்கள் வந்துவிட்டிருந்தனர்.

''ராமசாமி நம்ம மேகநாதனைக் கிளப்பிக்கிட்டு வர்ரத்துக்குள்ளே பொழுதே விடிஞ்சுடும்போல இருக்கு'' உரக்கச் சிரித்தபடி சுந்தரம் அங்கே பரப்பி இருந்த மணல் மீது அமர்ந்தார்.

புதிதாக முளைத்திருந்த புறநகர் காலனிப் பகுதி அது. காலனி வாசிகளின் பக்திக்காகப் பெரிய மனதுடன், விநாயகப் பெருமானும் அந்தப் பகுதியில் கோயில் கொள்ள விழைந்திருந்தார். காலனி வாசிகளின் பெரு முயற்சியால் கணிசமான தொகையுடன் கோவில் உருவாகிக் கொண்டிருந்தது. கட்டட வேலைகள் நடந்து கொண்டிருந்ததால் மணலும் செங்கல்லும், இரும்புக் கம்பிகளுமாகக் கிடந்தன.



சுந்தரம் சொந்த வீட்டுக்காரர்தான். அவர் தம்மைப் போலவே பொழுது போகாத நண்பர்கள் சிலரை ஒன்று சேர்த்து, பிள்ளையார் கோவில் வாயிலை சந்திக்கும்... இடமாக்கி, வைத்திருந்தார். நான்கைந்து வயதானவர்கள் சேர்ந்துவிட்டால் வயது இடைவெளி (Generation Gap), இந்தக் காலம், அந்தக் காலம் என்ற பேச்சுக்கள் எழத்தானே செய்யும்.

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கசப்பான அனுபவம்.

''என் பேரன் படுத்தும் பாடு சகிக்கலைப்பா. சதா வீட்ல ஓயாமல் ஸ்டீரியோவை அலற விடறான். அந்த 'பாப் மியூஸிக் சப்தம் என் மண்டைக்குள்ளே குடைஞ்சு ரத்தமே வந்துடும் போல பாடுபடுத்துது'' ஒருத்தர் சலித்துக் கொண்டார்.

''எதுவும் கண்டுக்காதே. ஏதாச்சும் சொல்லிட்டா வயசாயிட்டுது அதான் சங்கீதம் கூட சத்தமா தெரியுதுன்னு கூக்குரல் போடுவான். அவனோட அம்மாவும் அப்பாவும் அவனுக்குத்தான் பரிஞ்சு பேசுவாங்க'' சுந்தரம் சிரித்தார்.

உண்மைதான். பேரன் பிறக்கவில்லை. அதற்கு முன்பே சுகுணா அவருக்கு வேறு விதத்தில் அதிர்ச்சி வைத்தியம் செய்து விட்டாளே?

திருமணம் ஆன புதிதில், சுகுணா அலுவலகத் திலிருந்து இரண்டு மாத லீவில் இருந்தாள். நரேந்திரனும்

அவளுமாக உல்லாசமாகத் தேனிலவு முடிந்து வீடு திரும்பிய பின் ஒரு நாள்... வழக்கம் போல மேகநாதன் எழுந்து காலை வேளை காப்பி, டிபன் எதுவும் செய்ய வில்லை.

மருமகள் வந்தாகிவிட்டதே. புதிதாக வந்தவளுக்கு அவரே வீட்டுப் பழக்கங்களெல்லாம் சொல்லித் தந்து விட்டிருந்தார். நரேந்திரனுக்கு என்ன பிடிக்கும், பிடிக்காது என்பதை, மாமியார் இருந்திருந்தால் மருமகளுக்கு எடுத்துக் கூறமாட்டாளா? அதைத்தான் அவரும் செய்தார். பிறகு திருப்தியுடன் அன்று சற்றே கண்ணயர்ந்து விட்டார்.

வீட்டு வேலைகளில் மருமகளுக்கு உதவ சற்று கூச்சப்பட்டு ஒதுங்கி இருந்தார். ''ஏன் மாமா! நீங்க எதுக்காக இந்த மாதிரி வேலையெல்லாம் செய்யணும்? நான் எதுக்கு இருக்கேன். இனிமே நீங்க ஓய்வு எடுத்துக் கிடுங்க'' என்று மருமகள் உரிமையுடன் அன்பாகக் கூறுவாள் என எதிர்பார்த்தார். ஆனால் நடந்தது என்ன?

''வீடா இது? எங்க பார்த்தாலும் ஒரே துணி, குப்பை, அப்பப்பா இதெல்லாம் ஒழுங்கு செய்திட்டு, எப்படித் தான் நானும் ஆபீஸ் போய் வரப் போறேனோ?'' சுகுணா முணு முணுத்தது அவர் காதில் துல்லியமாகக் கேட்டது?

திடுக்கிட்டு விழித்து எழுந்தார். வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்து ஒரு சில நாட்கள் கூட ஆகவில்லை அதற்குள்...?

''ஆமா? நரேன்... என்னையும் வேலையை விடக் கூடாதுன்னு சொல்லிட்டே. வீட்டு மேல கடன் அடையணும்னா ரெண்டு பேரும் சம்பாதிக்கணும்னு சொன்னே. இப்ப... ஆபீஸ் வீடு... ரெண்டையும் நான் எப்படி சமாளிக்கிறது'' அடிக் குரலில் கணவனை அதட்டிக் கொண்டிருந்தாள்.



''இந்த வீட்டை வாங்க அப்பா கொஞ்சம் உதவினார். ஆபீஸ்ல வாங்கின கடன் அடையறவரை பொறுத்துக்க... சுகுணா.''

வாழ்க்கையின் துவக்கமே அவளுக்கு பணத்தின் அஸ்திவாரத்தில் ஆரம்பமாகி விட்டிருக்கிறது. கைநிறைய சம்பாதிக்கிற மகன், இப்போது மனைவியிடம் கடன்பட வேண்டிய நிலை...!

''அதுக்குச் சொல்லலே, ஏதாச்சும் ஒண்ணுதான் என்னாலே முடியும். உங்கப்பாதான் வீட்டு வேலைகளை யெல்லாம் செய்வாருன்னு சொல்லுவியே நரேன். அவர் எனக்கு உதவலாமே.''

அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''பாவம் அப்பா! அவருக்கு இனிமே நாமதானே உதவணும்?'' என்று அனுதாபப்பட வேண்டிய மருமகள் என்ன சொல்கிறாள்.

''நீ சொல்லவே வேணாம். எங்கப்பாவே எல்லாம் செய்திடுவார்'' நரேன் அவளைச் சமாதானப்படுத்தினான்.

மனைவியின் அழகிய விழிகளில் கண்ணீரோ, கனலோ வெளிப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத கோழை அவன். முதுமையால் நலிந்து கொண் டிருக்கும் அவரை இனி அவன் எத்தனை தூரம் ஆதரவுடன் பராமரிப்பான்...?

வானம் கசியத் துவங்கியது. 'மழை... மழை' பதறியபடி கூட்டம் கலைந்து வீடு திரும்பத் தொடங்கியது.

## 2

நரேந்திரன் வழக்கம்போல, முன் பக்கத்து வராந்தாவில் நின்றிருந்த ஸ்கூட்டரைத் தள்ளி, கேட்டருகில் நிறுத்தினான்.

''சுகுணா! நேரமாயிட்டது, இன்னுமா புறப் படலை'' உரக்கக் குரல் கொடுத்துவிட்டு, ஸ்கூட்டரைக் கிளப்பத் துவங்கினான்.

டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடி முன் தன் முழு அலங்காரத்தைப் பார்த்ததும் திருப்தி அடையாதவளாய் நின்றாள் சுகுணா. தோள்வரை புரண்ட கூந்தலைக் கவனமாக வாரி, பின்புறமாக 'கிளிப்'பினுள் சொரு கினாள். கஞ்சியுடன் முட முடத்த 'சந்தேரி' நூல் சேலை அவளது வனப்பிற்கும் எழில் கூட்டியது. மிதமான ஒப்பனை. உதட்டு சாயம். நெற்றியில் ஒட்ட வைத்த சாந்துப் பொட்டு வில்லையை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

''டிபன் பாக்ஸை மறந்திட்டியேம்மா'' மேகநாதன் சாப்பாட்டு டப்பாவை அவளிடம் நீட்டினார். ''தாங்ஸ்'' மாமனாரிடம் கைநீட்டி வாங்கியவள் தோள் பைக்குள் போட்டபடி வாயிலுக்கு விரைந்தாள்.

''மழை திடிர் திடீர்னு வருதே, குடை எடுத்துக் கொண்டு போறதுதானே...'' மாமனார் கனிவுடன் உபசரித்தபடி பின்னால் வர அவள் காதில் போட்டுக் கொள்ளாமல் ஸ்கூட்டரில் ஏறினாள். கணவனின் வயிற்றைக் கைகளால் அணைத்தபடி, அவன் தோளில் ஒய்யாரமாக சாய்ந்தபடி அவரைப் பார்த்தாள்.



கணவன் மனைவிக்குள் அன்பு, ஆசை எல்லாம் தேவைதான். ஆனால், அதை வயதான மாமனார் முன்னாலே... மனதைக் கடிவாளம் இட்டார்.

''அப்பா! கொஞ்சம் கேட்டை சாத்துறீங்களா ப்ளீஸ்'' மகன் உத்தரவிட்டபடியே கேட்டைக் கடந்து மறைந்தான்.

கேட்டை மூடியபின் உள்ளே சென்றவர் மனம் அலைமோத ஆரம்பித்தது.

நரேந்திரன் ஒரு முறை கடுமையான அம்மை நோயில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அலுவலகத் திற்கும் செல்லாமல், மகனை இரவும் பகலுமாகக் கருத்தோடு கவனித்தார் மேகநாதன்.

வீட்டில் பாத்திரம் தேய்த்து, பெருக்கி சுத்தம் செய்யும் நாகம்மாள் சொன்னாள், ''யாராச்சும் உதவிக்கு ஒரு ஆளை ஏற்பாடு செய்யுங்க ஐயா. நீங்க ஒத்தக் கையாலே எப்படி சமாளிப்பீங்க. அதிலும் ஆண் பிள்ளை, வீட்டையும் கவனிச்சுகிட்டு, மகனையும் பார்த்துக்கறது எளிதான காரியமா?''

அவர் மறுத்து விட்டார். பிள்ளை இல்லையே என்று தவம் இருந்து பெற்ற மகன். அவன் அவரது நாற்பது வயதுக்குமேல் அருமையாகப் பிறந்த மகன். வயது ஆகித் தாய்மைப் பேறடைந்த காரணத்தால் மனைவியும் இறந்த பிறகு நரேந்திரன் மீது உயிரையே வைத்திருந்தார்.

''அவங்கம்மா இருந்திருந்தா செய்யமாட்டாங்களா! அது மாதிரி நானும் செய்யறேன்'' மிக அருகில் இருந்து வேளை தவறாமல் மருந்து கொடுத்து கண்காணித்தார்.

''மகமாயி அம்மனுக்காக வேண்டிக்கிடுங்க ஐயா'' என்று நாகம்மாள் சொன்னபடி அதையும் செய்தார்.

ஊரிலுள்ள அம்மன் கோவில்களுக்கெல்லாம் வேண்டிக்கொண்டு வலம் வந்தார். மகன் உடல் தேறி எழுந்ததும், அவர் எத்தனை குதூகலம் அடைந்தார்!

நரேந்திரன் மட்டும் அவரிடம் ஆசையாக இல்லை என்று கூற முடியாது. அவன் பெரியவனாக வளர்ந்தபின் பல முறை செல்லமாகக் கடிந்து கொள்வதுண்டு.

''அப்பா எதுக்காக இப்படி நீங்களே சமைச்சுக்கிட்டு திண்டாடுறீங்க. பேசாம ஓட்டல்லே சாப்பிடுவோம்.''

''ஓட்டல் சாப்பாடு உன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது நரேன். எனக்குத்தான் சமையல் தெரியுமே. ஒருவேளை சமையல் செய்தா ஓடற ஓட்டம் அவர் வேடிக்கையாகக் கூறுவார்.

இப்போது, அலுவலகத்திலிருந்து வரும் வழியிலேயே பல நாட்கள் நரேனும் சுகுணாவும் ஓட்டலில் வயிறு முட்டத் தின்றுவிட்டு வருவது வழக்கமாகி இருந்தது.

ஒரு முறை வேலையிலிருந்து வீடு திரும்பும் மருமகள் பாவம் என்று அவர் மனம் கசிந்து, சமையல் செய்து வைத்திருந்தார்.

அலுவலகத்திலிருந்து திரும்பிய சுகுணா சொன்னாள், ''இன்னிக்கி நாங்க ஒரு சிநேகிதர் கூட ஓட்டலுக்குப் போக வேண்டி இருந்துச்சு. அங்கே நல்லா சாப்பிட்டோம், உங்களுக்கு வேணுமானா'' என்று இழுத்தாள்.

''அடடே! முன்னமே தெரிஞ்சிருந்தா நான் சமைச்சிருக்க மாட்டேனே, பாவம்... வீணா ஆபீஸ்ல இருந்து வந்திட்டு கஷ்டப்படுவியேன்னு ஒரு ரசமும், கூட்டுமா வச்சிட்டேனே'' பரிதாபப்பட்டார் அவர்.



சுகுணாவிற்கு எரிச்சல் எல்லை மீறியது. ''என்னைக் கேட்காம எதுக்கு சாமானையெல்லாம் வீணாக்குறீங்க. நாக்கைப் பிடுங்கிக்கிட்டு நாலு காசு சம்பாதிக்க நாள் முழுவதும் ஓடவேண்டி இருக்கு. நீங்க வீட்ல உக்காந்து கிட்டு இஷ்டத்துக்கு பொருளை விரயம் செய்யறீங்க'' ஆயிரம் தேள் கொட்டிவிட வலி பொறுக்க முடியாத குத்தல் அவள் வார்த்தைகளில்... மேகநாதன் மனம் துடித்துப் போனார்.

அவர் ஆளாக்கிய மகன், பட்டம் பெற்று ஒரு பிரபல ஏற்றுமதிக் கம்பெனியில் நல்ல வேலையில் இருக்கிறான். கை நிறைய சம்பாதிப்பவன்.

சுகுணா மட்டும் என்ன? ரிஸப்ஷனிஸ்ட் வேலை. பெரிய கம்பெனி. இருவர் சம்பாதித்து வசதியாக வாழ முடியும் போதே எத்தனை பேச்சு பேசிவிட்டாள்.

அதே சமயம் அவர் வளர்த்த மகன் வாய் திறவாமல் மௌனம் சாதித்தது அவர் மனதை மிகவும் நோகச் செய்தது. ''எங்கப்பாகிட்ட எதுக்கு கோவிச்சுக் கொள்கிறாய்?'' என்று உதட்டளவில்கூட கடிந்து கொள்ளாதவன். மனைவி சொல்லே மந்திரமாக மாறிவிட்டவன், உள்ளம் துடித்துப் போனார் அவர்.

''நாளைக் காலையில் அப்படியே கூட வச்சு சாப்பிட்டுடலாம்மா. பிரிஜ்ல தூக்கி வச்சுடேன். எனக்கு மோர் சாதம் மட்டும் போதும்'' என்று சமாதானம் கூறினார் மேகநாதன்.

''எங்களுக்கெல்லாம் பழசு சாப்பிட்டுப் பழக்கம் இல்லை'' வெடுக்கெனக் கூறிய சுகுணாவை ஏறிட்டுப் பார்த்தார் அவர்.

"எனக்கும் பழக்கம் இல்லையேம்மா. ஆனா, பழக்க மில்லாத விஷயங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டி வருதே."

கோபத்துடன் முகத்தை சிணுங்கிக் கொண்டு அப்பால் அகன்றாள் அவள். மேகநாதன் விரலால்கூட உணவைத் தொடவில்லை. அதற்காகப் பசியை அடக்கிக் கொள்ள அவர் தயாராக இல்லை.

தோளில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு வெளியே போனவர், பக்கத்துக் கடை ஒன்றில் இரண்டு பன்னை வாங்கித் தின்று பசியாறினார்.

இப்போதெல்லாம் அவர் அடிக்கடி வெளியே சென்று பசியாறிக் கொள்வது சகஜமான நிகழ்ச்சி ஆகி விட்டிருந்தது. மேகநாதன் சாப்பாட்டு மேஜைமீது தமது தட்டைக் கொணர்ந்து வைத்தபடி புன்னகைத்துக் கொண்டார்.

பசி வந்திடப் பத்தும் பறந்து போகாதா? ஒரு முறை அவருக்கு இதுபோன்ற ஏதோ ஒரு வேகம். கையில் இரு பக்கடா பொட்டலங்கள். தெருவோரத்து பஸ் நிலையத் தருகில் நின்றபடி பொட்டலத்தை பிரித்து வாயில் போட்டு மென்றார்.

அடுத்தகணம், கிரீச்சிட்டு நின்ற பஸ்ஸிலிருந்து, சுகுணாவும் அவளைத் தொடர்ந்து இரண்டு பெண் மணிகளும் அட்டகாசமாகச் சிரித்தபடி இறங்கி வந்தனர்.

"அட கடவுளே! வீட்டை விட்டு வெளியே வந்தாலும் வயிறாறத் தின்ன விடமாட்டாள் போல இருக்குதே" தமக்குள்ளே முணுமுணுத்தபடி மறுபக்கம் திரும்பிக் கொண்டார்.



அந்தச் சமயம் பார்த்துத்தானா அவரது தோழர்களில் ஒருவர் வந்து தொலைக்க வேண்டும்?.. "மேகநாதா? என்ன இது? நடுத் தெருவில் நின்னுக்கிட்டு பக்கடா திங்கறே..." உரக்கக் குரல் கொடுத்தபடி அருகே வந்து விட்டார்.

சுகுணா திடுக்கிட்டுத் திரும்பியவள் உறுத்துப் பார்த்தாள். அவளது மாமனார் வேண்டும் என்றே அவளை அவமானப்படுத்த அப்படி செய்வதாக எண்ணியவளாய் முகம் சிவக்க, சினத்துடன் வேகமாக நடந்தாள்.

அன்று இரவு அவரைப் பற்றிய புகார் பட்டியல் தயார். இரவு படுக்கப் போகுமுன், மகன் அவரிடம் கோபமாகக் கேட்டான்.

"எத்தனை நாளா எங்களை அவமானப்படுத் தணும்னு கங்கணம் கட்டிக்கிட்டிருக்கீங்க?"

"என்னப்பா சொல்றே?"

"நடுத் தெருவில, என்னவோ வாங்கித் தின்னு கிட்டிருந்தீங்களாமே?"

அவர் அலட்சியமாக இருந்தார்.

"உங்களை அந்த மாதிரி பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க. நாங்க எதுவுமே குடுக்காம உங்களைப் பட்டினி போட்டுக் கொல்றதா நினைக்கமாட்டாங்க? ஏதாச்சும் வேணும்னா, வீட்டிலே செய்து சாப்பிடறது."

அவர் பதில் பேசவில்லை. வீட்டில் செய்து சாப்பிட்டால், மருமகள் வீண் செலவு என்று கூக்குரலிடும் புண்ணியவதியாயிற்றே!

"நரேன்! உங்க பணத்திலே எதையும் வாங்கித் திங்கலைப்பா. அது என் பணம். நான் சாப்பிட்டேன்."

சொல்லிவிட நுனி நாக்குவரை வந்த வார்த்தைகளை, நிறுத்திக் கொண்டார்.

''மேகா! மேகா!'' சுந்தரத்தின் உரத்த குரல் வெளி வாசலில் கேட்டது. உள்பக்கம் வந்து அழைப்பு மணியை அழுத்தும் அளவிற்கு அவருக்குப் பொறுமை கிடையாது.

வாயிற் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தவர் ''சாப்பிடப் போறேன். என்ன விஷயம்?'' என்றார்.

''நீ விசாரிக்கச் சொன்னியே அந்த முக்கியமான விஷயத்தை நல்லா விவரமா கேட்டுக்கிட்டு வந்துட்டேன்'' சுந்தரம் உற்சாகத்துடன் கூறினார்.

''அப்படியா? உள்ளே வா'' என்றார் மேகநாதன்.

## 3

**கா**லையிலிருந்து சுகுணாவின் கொந்தளிப்பு அடங்கினபாடில்லை.

'பூனை மாதிரி இருந்த ஆசாமி எப்படி புலிபோல மாறி விடுகிறார்' என்று மாமனார் மீது ஆத்திரம் பொங்கியது. அவளுக்குத் திருமணமாகி வந்த புதிதில் அவள் ஏவின வேலைகளையெல்லாம் ஓடி ஓடிச் செய்த மனிதர், இப்போது இடக்கு செய்ய ஆரம்பித்திருக்கிறார்.

''உங்கப்பா வீட்லதானே இருக்காரு. தெருக் கோடியிலே இருக்கற லாண்ட்ரிக்காரன் இஸ்திரி துணியைக் குடுப்பான். பில்லைக் குடுத்து வாங்கிட்டு வந்தா என்னவாம்?''



நரேந்திரன் பாடு திண்டாட்டமாக இருந்தது. பெற்ற தகப்பனிடம் ஒரு சிறிது பாசம் ஒட்டிக் கொண்டிருந்ததன் விளைவு. ''அவருக்கு வயசாயிட்டு போகுதில்லையா? சாயங்காலம் ஆபீஸ் விட்டுத் திரும்பற சமயம், நாமே வாங்கிட்டு வந்திடலாமே' சமாதானப்படுத்தினான்.

சுகுணா அவனை உற்றுப் பார்த்தாள். ''சதா வீட்ல உக்காந்துகிட்டு உங்கப்பா என்னதான் செய்வாராம். சாப்பிட்ட சோறு ஜீரணமாகனும் தெரியுமில்லே?''

மனைவியின் அழகிய கண்களில் கனல் தெரிப்பதை நரேன் ஒரு போதும் விரும்பியதில்லை. ''இதப் பாரு சுகுணா நீ ஒரு விஷயத்தை நல்லா புரிஞ்சு கொள்ளணும்'' மெல்ல ஆரம்பித்தான்.

''இன்னும் என்ன கதை வச்சுருக்கீங்க. உங்கப்பா இன்னொரு கல்யாணம் கட்டிக்காம, மகனுக்காக வாழ்க்கையையே தியாகம் செய்தவர். ஓடாய் உழைச்சுத் தேஞ்சி போனவர்.''

''இன்னும் என்ன பாக்கி'' உறுமினாள்.

''இப்ப சொந்தமா வாங்கி இருக்கிற இந்த புறநகர்ப் பகுதி வீடு எப்படி வந்திருச்சுன்னு நினைப்பு இருக்கா?''

''அதையும்தான் நூறு முறை சொல்லியாச்சே. நீ ஆபீஸ்ல கடன் வாங்கின பணம் போதாது, உங்கப்பா கொஞ்சம் கொடுத்து உதவினார்னு. பெரிசா குடுத்திட்டார். முழுப்பணத்தையும் குடுத்தா முழுகியா போயிடும்'' நொடித்தாள் அவள்.

பிராவிடண்ட்பண்ட் பணம், பாங்க் சேமிப்பு எனத் தம் ஓய்வு காலத் தொகை முழுவதையும் மேகநாதன் மகனிடம் ஒப்படைக்கவில்லை. புறநகர்ப் பகுதிகளில்

காலனி ஒன்று புதிதாக முளைக்கப் போகிறது என்றதும் அவருக்கும் ஆசை உதித்தது உண்மைதான்.

இரண்டு படுக்கை அறைகள், சாப்பாடு, வரவேற்பு, சமையல் என்ற வசதிகள் கொண்ட சின்னஞ்சிறு வீடு, முன் பக்கம் சிறிய தோட்டம்.

அதே காலனியில் அவருடன் சுந்தரமும் வேறு பக்கம் வசித்து வந்தார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் தோட்டக்கலை ரசனையைப் பெருக்கிக் கொள்ள முன்புறத் தோட்டம் மேகநாதனுக்குப் பெரிதும் உதவிற்று. பின் பக்கத்தில் உள்ள சிறிய இடத்தினுள் ஒரு குட்டிக் காய்கறிப் பண்ணையை உருவாக்கித் திருப்திப்பட்டுக் கொண் டிருந்தார். முன்பக்கம் மல்லிகையும் ரோஜாவும் குலுங்கின.

நண்பர் சுந்தரத்தின் மூலம் அவருக்குத் தோழர்களும் பெருகினர்.

''ஓரளவுக்குப் பண உதவி செய்து குடுத்திட்டேன் என் மகனுக்கு. கொஞ்சம் என் பேர்ல போட்டு வச்சிருக்கேன். எல்லாத்தையும் குடுத்திட்டு தவிக்கக் கூடாது பாரு'' என்பார் நண்பர்களிடம்.

அன்றும் அதேபோல் ஒரு நிகழ்ச்சிதான் சுகுணாவின் கோபத்தைத் தூண்டி விட்டிருந்தது.

சனிக்கிழமை அவளது அலுவலகத்தில் அரைநாள், முக்கிய வேலை என்று புறப்பட்டுப் போனவள் பிற்பகல் ஒரு பட்டாளத்துடன் திரும்பி விட்டிருந்தாள்.

முன்புற வரவேற்பறையில் சிரிப்பும் கும்மாளமுமாக, தோழிகளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள்.



பங்கஜம் அவளது தோழிகளில் பெரிய வாயாடி. அருகில் அமர்ந்திருந்த லீலாவைத் தூண்டி விட்டவள், ''ஆமா! இத்தனை கச்சிதமா வீட்டை கட்டிக்கிட்டியே, எப்படி?'' என்றாள்.

''கட்டிக்கிட்டவர், கட்டிப் போட்டிருப்பார்'' லீலா கண்களைக் குறும்புடன் சிமிட்டினாள்.

''நல்லா சொன்னீங்களே, எல்லாம் 'லோன்'ல வாங்கி கட்டின வீடாக்கும்'' பெருமூச்செறிந்தவளாக சுகுணா எழுந்தாள். ''முதல்லே காப்பி, கூல்டிரிங்ஸ் ஏதாச்சும்...''

''இந்த வெயில்லே காப்பி எதுக்கு. கூலா ஏதாச்சும் குடு'' தோழிகள் ஏகோபித்த குரலில் கோஷமிட்டனர்.

மருமகளின் அரட்டைத் தோழிகளுக்காக 'பிரிட்ஜை'த் திறந்து குளிர்பான பாட்டிலை எடுத்தார் அவர். சமையலறைக்குள் சென்று நொடியில் சுத்தமான கண்ணாடி டம்ளர்கள் நிறைய குளிர்பானங்களை நிரப்பி, ஒரு ட்ரேயில் வைத்து விட்டிருந்தார்.

உள்ளே வந்த சுகுணா மகிழ்ந்து போனதாகக் காட்டி கொள்ளவில்லை.

சமையலறை வலை பீரேவைத் திறந்தாள். எவர் சில்வர் டப்பாவினுள் இருந்த பிஸ்கட் பொட்டலத்தைப் பரபரவென பிரித்து ஒரு தட்டில் பரப்பினாள். ட்ரேயில் அதையும் வைத்தபடி வெளியேறினாள்.

''அட? இத்தனை சீக்கிரம் தயார் செய்து விட்டு வந்திட்டியே. ரொம்ப சாமர்த்தியக்காரி'' தோழிகள் அவளைப் புகழ்ந்த போது, சுகுணா பதில் கூறவில்லை.

''என் மாமனார் வயதானவர்தான். இருந்தாலும் வீட்டு வேலைகளில் எனக்கு பக்கபலமாக இருந்து

உதவுகிறார்'' என்று பெருமைக்காகக்கூட ஒரு வார்த்தை சொல்ல மனது வரவில்லையே மருமகளுக்கு? மனம் குமைந்தவராய், முன்னறைப் பக்கம் வந்தவர் மனதில் பிடிவாதம் தலைதூக்கியது.

''ஏம்மா சுகுணா! வேற ஏதாச்சும் வேணுமா? வெளியே கடைக்குப் போய் வாழைப்பழம் வாங்கி வரணுமா?'' உரக்கக் கேட்டார் மேகநாதன்.

அந்த ஹாலில் கலகலத்த கும்மாளமும், சிரிப்பும் இருந்த இடம் தெரியாமல் சட்டென ஒரு விநாடி நின்று போயின. மருமகளின் முகம் கடுகடுத்தது.

''யார் இது சுகுணா?'' லீலா வியப்புடன் கேட்டாள்.

''இப்ப புரியுது. சுகுணா உள்ளே போய் ஒரு நொடியில் குளிர்பானமும், பிஸ்கட்டுமாக வெளியே வந்ததன் மர்மம்'' பங்கஜம் அரட்டலாகக் கூறிவிட்டு, ''ஆமா? இந்த சமையற்காரர், உங்க வீட்ல எத்தனை காலமா இருக்கார். பார்த்தா ரொம்ப வயசானவர் மாதிரி தெரியுது'' என்றாள் தொடர்ந்து.

அவமானம் தாங்க மாட்டாதவளாய் சுகுணா மாமனாரை வெறித்தாள்.

''அடே? என்னம்மா நீங்க, நான் சுகுணாவுக்கு மாமனார். என் மருமகள் மகள் மாதிரி. அவளுக்கு அப்பா இருந்தா உதவமாட்டாரா, அதே போலத்தான் செய்தேன்.''

இவரா சுகுணாவின் மாமனார். பகட்டாக உடை உடுத்திக்கொண்டு, செண்ட் மணம் வீச ஆபீஸ் ரிஸப்ஷனில் தேவதைபோல அமர்ந்திருக்கும் சுகுணா எங்கே?

கச்சிதமான ஸப்பாரி ஸூட்டில் ஸ்கூட்டரில் அவளை கொணர்ந்து இறக்கும் அவள் கணவன் நரேந்திரனின் கம்பீரமான தோற்றம் எங்கே?



இதோ கசங்கிய வேட்டியும் அழுக்குப் படிந்த பனியனுமாக, தோளில் துண்டு சகிதம் நிற்கும் இந்தக் கிழவர் எங்கே? ஏணி வைத்தால்கூட எட்டாத கற்பனையாக இருக்கிறதே.

''இவரா உன் மாமனார்.'' தோழிகள் வியப்பும், ஆவலும் கலந்த குரலில் கேட்டபோது சுகுணா அவமானத்தால் சுருங்கிப் போனாள்.

''தயவு செஞ்சு நீங்க வீணா அலையவேணாம். உள்ளே போய் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளுங்க'' சுகுணா பற்களைக் கடித்தாள்.

மேகநாதன் உள்ளே மறைந்ததும் பங்கஜம் உரக்கச் சிரித்துவிட்டு ''மிஸ்டர் நரேந்திரன் கம்பீரமான மனுஷர். அந்தக் கூர்மையான மூக்கு, வரிசைப் பற்கள், ஆழ்ந்த கண்கள்... ஊஹூம்... ஒரு சமயம் அவங்கம்மாவைக் கொண்டிருப்பார் சாயலில். இவர்... ஒரு மாதிரி இருக்கார்!'' என்றாள்.

''ரொம்ப ஸாரி! உன் மாமனார் என்ற சொல்லுக்கே இவர் திருஷ்டி பரிகாரம்'' கொல்லென்ற சிரிப்பு அறை முழுவதும் பரவியது.

''வேணுமின்னே உங்கப்பா என் சிநேகிதிங்க முன்னால அழுக்கு மூட்டை மாதிரி வந்து நின்னாரு. எல்லோரும் பார்த்து சிரிக்கட்டும்னு அவருக்கு நினைப்பு'' சீறினாள் அவள்.

இப்போது ஏவின வேலைகளைச் செய்ய அவர் மறுக்க ஆரம்பித்தது வேறு கோபத்தைக் கிளறிவிட ஏதுவாக இருந்தது.

''வர வர சின்னக் குழந்தையாட்டம் என்ன அடம் பிடிக்கிறார். இதை நீ ஏன் கேக்கமாட்டேங்கறே நரேன்.''

நரேந்திரன் ஒரு விநாடி நிதானித்தான். பிறகு கூறினான். ''அப்பாவைக் கேட்டுவிட அரை விநாடிகூட ஆகாது ஆனா...''

''என்ன ஆனா... நீ எப்பவுமே ஒரு பெரிய கோழை; எப்பப் பாரு அப்பா... அப்பாவோட பிள்ளை.''

''சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் அவர் பிள்ளைதான்.''

''விளையாட்டா?'' அவள் சிணுங்கினாள்.

மனைவியின் கன்னத்தை இலேசாகக் கிள்ளிவிட்டு ''என் அன்பான சுகுணா, புரியாமல் பேசாதே. அப்பா கிட்ட இன்னமும் பணம் பாங்க் கணக்கில் இருக்கு. அது வர்ற வரைக்கும் உன் கோபத்தை மூட்டை கட்டிவச் சிருக்கணும்னு தெரிஞ்சுக்கோ!'' என்றான்.

சுகுணாவின் வாயைப் பணம் என்ற பேய் அடைத்து விட்டது.

## 4

வாரவிடுமுறை நாட்களில் மகனும் மருமகளும் வீட்டில் தங்குவது அபூர்வம் என்பது மேகநாதனுக்குத் தெரியும்.

ஞாயிறு விடுமுறை என்றால் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு நண்பர்கள் வீடு, சினிமா என்று போய் விடுவார்கள். வெளியே சாப்பாடு, ஐஸ்கிரீம் என்று வயிற்றை நிரப்பிக்கொண்டு வீடு வந்து சேர்வதற்குள் இரவு எட்டு மணியாகிவிடும்.



ஆரம்பத்தில் மேகநாதன் தனிமையில் மனம் சோர்ந்து போய்விட்டிருந்தார். திருமணத்திற்கு முன்பு, அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய மகனை ஆவலுடன் வரவேற்பார்.

''என்னப்பா, எதுக்காக வெண்பொங்கல், தொட்டுக் கொள்ள சட்னி எல்லாம் செய்திருக்கீங்க?'' என்றபடி சாப்பாட்டு மேஜையருகே அமரும் மகனைப் பார்த்துப் பெருமிதம் கொள்வார்.

''என்னால முடிஞ்சவரை செய்யறேன். பிறகு உன் மனைவி கையாலே விதம் விதமா செஞ்சு போடறதை சாப்பிடப்பா'' மகிழ்ச்சியுடன் கூறுவார்.

''நீங்களும் உங்க மருமகள் கையால சாப்பிடத்தானே போறீங்க. அப்ப உங்களுக்குப் பூரண ஓய்வு'' மகன் பரிவுடன் கூறுவதைக் கேட்டு அகமகிழ்ந்து போய் விடுவார்.

இப்போது...? மகனுக்கு மட்டுமல்ல... மருமகளுக்கும் சேர்த்தே அவர் செய்து கொண்டிருக்கிறார். அந்த அவல நிலை எப்படி ஏற்பட்டது.

மேகநாதன் சமையலறைப் பக்கம் வந்தார். காலையில் மருமகள் வேண்டா வெறுப்பாகப் போட்டு வைத்திருந்த காப்பி ஜில்லென்று ஒரு டம்ளரினுள் இருந்தது. அதை மூடி வைக்கக்கூட நேரம் இல்லை போலும்!

''நாங்க வெளியே சாப்பிடப் போறோம். சுகுணாவை உங்களுக்காக ஏதாச்சும் செய்து வைக்கச் சொல்றேன்'' நரேன் மெல்ல ஆரம்பித்தான் அன்று காலையில்.

''கவலைப்படாதே நரேன். என் சாப்பாடுதானே, நானே செய்துக்கறேன். நீங்க ரெண்டு பேரும் வெளியே

போய்ட்டு மெதுவா வாங்க'' அவர் குளியலறைக்குள் புகுந்து கொண்டார்.

அவர் குளியலை முடித்து வேறு உடை அணிந்து வருவதற்குள் தம்பதி சமேதராக ஸ்கூட்டரில் ஆரோகணித்து விட்டிருந்தனர். மேகநாதன் மேற்கொண்டு எதுவும் கூறாமல் கதவை மூடிக்கொண்டு உள்ளே வந்தார்.

வீட்டு வேலை செய்யும் பெண்மணி வேலையை முடித்து விட்டுப் புறப்படும்வரை காத்திருந்தவர் மனத்தில் புதுத் தீர்மானம் உருவாகி இருந்தது.

வீட்டைக் காவல் காக்கவும், வேலைகள் செய்யவும் மட்டும் அவர் பயன்பட வேண்டும் என்ற சுயநலமான மனப்போக்கைப் பெரிதும் வெறுத்தார் அவர்.

கேவலம் பணம் மட்டும் ஒரு தனி மனிதன் வாழ்வில் எல்லாவற்றையும் வாரி வழங்கிவிட முடியாது என்பதை ஏன் மகனும் மருமகளும் புரிந்து கொள்ள வில்லை.

வயது என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரி வருவது தான். இன்றைக்கு இளமையுடன் துள்ளுபவர்கள் நாளைக்கு முதுமையால் தள்ளாடுவதற்கு எத்தனை காலமாகிவிடும்.

சட்டென சுந்தரத்தின் நினைப்பு வந்தது. இரண்டு நாட்களுக்கு முன் அவர் வீடு தேடி வந்து சொல்லிட்டுப் போன விஷயம்...? அவசரமாக, வீட்டைப் பூட்டிக் கொண்டு தெருவில் இறங்கினார்.

தெரு முனையைத் தாண்டும் பொழுதுதான் மருமகள் புறப்படுமுன் உத்தரவிட்டது ஞாபகத்திற்கு வந்தது. ''மளிகைக் கடைக்காரனிடம் 'லிஸ்ட்' குடுத் திட்டேன். சாமான்களை எடுத்திட்டு வந்தால் வைக்கச் சொல்லுங்க. நான் வந்து சரி பாத்துக்கறேன்.''



'இப்ப என்ன செய்யறது? மளிகைக் கடை ஆசாமி வாசல்ல வந்து நிற்பானே?' பதறிப் போனார் அவர்.

'ஆமாம், அதற்குள்ளாரவா வந்துடப் போறான்? ஒரு ஓட்டம் சுந்தரத்துக்கிட்டப் பேசிட்டு திரும்ப வந்திட்டா போவுது.''

சுந்தரத்தின் வீட்டிலிருந்து திரும்பியதும் பசி வயிற்றைக் குடைந்தது. காலையில் ஒரு டம்ளர் காப்பி பருகியதுடன் சரி. சுந்தரத்தின் வீட்டில் மரியாதைக்கு ''காப்பி சாப்பிடறீங்களா மாமா?'' என்று கேட்பார்கள். மேகநாதன் மறுத்து விடுவார். காரணம், சுந்தரத்தின் பொருட்டு வரும் விருந்தாளிகளையும் அதன் காரணமாக ஏற்படும், செலவினங்களையும் அவர்கள் கட்டோடு வெறுப்பார்கள்.

'ஊர்ல இருக்கற கிழம் கட்டையெல்லாம் நம்ம வீட்டுக்குப் படை எடுக்குதுங்க' என்று கரிப்பார்கள் என்பது மேகநாதனுக்குத் தெரியும்.

மேகநாதன் சுந்தரத்திடம் தாழ்ந்த குரலில் பேசிவிட்டு வெளியேறியதும் வெகுவாகக் களைத்து விட்டிருந்தார். மனத்தினுள் இருந்த கசப்பு, அசதி, பசி, யாவுமாக அவரை எதிரே புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த ரெஸ்ட்டாரண்ட் பக்கம் பிடரியைப் பிடித்து உந்தின.

வெங்காய மணம் வீசிய ஊத்தப்பமும், சூடான வடைகளுடன் சுடச்சுட காப்பியும் வயிற்றை நிரப்பிய குஷியில் பில்லைக் கொடுத்தவர் வெளியே வந்தார். அப்போதுதான் வீட்டு நினைப்பு அவருக்கு வந்தது.

'மளிகைக் கடைக்காரன் வந்து போயிருப்பானோ?' பரபரப்புடன் வீடு திரும்பினார். வாயிற்புற கேட்டுத் திறந்

திருந்தது. சைக்கிள் வந்துபோன அடையாளம் தரையில் தெரிந்தது.

'கடை ஆள் சாமான்களை எடுத்துக் கொண்டு வந்து போயிருப்பான். இனி என்ன செய்வது! சுகுணா வந்தால் மொலு மொலுவென்று கொட்டித் தீர்ப்பாள்.'

மருமகளிடம் பயம் என்று கூற முடியாது. ஆனால் சதா முணுமுணுத்துக் கொண்டே இருக்கும் நபருடன் வீட்டினுள் வளைய வருவது எப்படி? சுகுணாவின் நச்சரிப்பைத் தவிர்க்க வேணுமானால் நேரே மளிகைக் கடை இருக்கும் இடம் தேடிச் செல்ல வேண்டும்.

மேகநாதன் வீட்டைத் திறக்காமல் திரும்பி நடந்தார். மளிகைக் கடைக்காரர் இவரைக் கண்டதும் மதிப்புடன் வணக்கம் தெரிவித்தார்.

''நீங்க, எதுக்கு வர்ரீங்க, சொல்லி அனுப்பினா போதுமே? 'லிஸ்ட்ல' ஏதானும் சாமான் விட்டுப் போயிட்டதா'' என்றார் பணிவுடன்.

''இல்லே... பையன் சாமான் கொணர்ந்தபோது நான் வீட்ல இல்லே...''

''நீங்க எதுக்கு இருக்கணும். சின்னம்மா இருப்பாங்களே, இன்னிக்கி லீவு நாள்னு சொன்னாங்க...''

''ஆமா, ஆனா அவங்க ரெண்டு பேரும் அவசரமா வெளியே புறப்பட்டுப் போயிட்டாங்க... நாமதான் வீட்ல இருக்கோமேன்னு நினைச்சேன். நானும் வீட்டைப் பூட்டிக்கிட்டு வெளியே போயிட்டேன். அப்பப் பார்த்து உங்க பையன் வந்திட்டுப் போயிட்டாப்போல இருக்கு... இப்ப அனுப்பிச்சீங்கன்னா தேவலாம்.''



''அடடே? அவன் பல இடங்களுக்குப் போறவன். எல்லாத்தையும் முடிச்சுக்கிட்டுத்தான் கடைக்குத் திரும்புவான். உங்க 'லிஸ்ட்'படி சாமான் பெட்டி அவன்கிட்ட இருக்கே? அவன் வந்த உடனே அனுப்பி வைக்கிறேன்.''

மேகநாதன் வீடு திரும்பினார். மாலை ஆறு மணிக்கு சுகுணாவும், நரேனும் வீடு திரும்பிய சமயம் கடைக்காரப் பையன் பற்களைக் காட்டியபடி உள்ளே வந்தான்.

''விளக்கு வச்ச சமயத்தில் சாமான்களைக் கொண்டு வந்து நிக்கறியே, எப்படிக் கணக்குப் பார்க்கறது'' சுகுணா எரிந்து விழுந்தாள்.

''காலையில் ஒரு வாட்டி வந்திட்டுப் போனேன்...'' பையன் ஆதியோடந்தமாய் விஷயத்தைப் பிட்டு வைத்து விட்டு நகர்ந்தான்.

''வரவர சின்னவங்களுக்கு சரியாப் பெரியவங்களும் போட்டி போட ஆரம்பிச்சுட்டாப்போல இருக்கு! நாம வெளியில போனது உங்கப்பாவுக்குப் பொறுக்கலை. உடனே ஊர் சுத்தக் கிளம்பி இருக்காரு'' கணவனிடம் வெடித்தாள் சுகுணா.

''நான் ஊர் சுத்தப் போகலை. ஒரு வேலையாகத்தான் போனேன்'' வெடுக்கெனக் கூறிய மேகநாதன் மகனை ஒரு முறை பார்த்தார்.

''நரேன்! நீங்க ரெண்டு பேரும் வந்திட்டீங்க இல்லியா? இப்ப எனக்கு வெளியே போக வேண்டிய வேலை இருக்கு. ராத்திரி சாப்பிட வர மாட்டேன்.'' கையை வீசியபடி வெளியே நடந்தார்.

சுகுணாவின் முகம் கோபத்தால் சிவந்தது.

# 5

கோவில் வாயிலில் பரப்பிக் கிடந்த மணல் தரையில் உட்கார்ந்தபடி மேலே பார்த்தார் மேகநாதன். ஓர் இளம் ஜோடி, கையில் பிடித்த குழந்தையுடன் முன்னால் நடந்து கொண்டிருந்தது கண்ணில் பட்டது.

''தாத்தாகிட்ட போணம், தாத்தாகிட்ட'' குழந்தை அடம் பிடித்தபடி அவரது மடியில் வந்து தொப்பென்று விழுந்தான். தூக்கி வாரிப் போட்டது அவருக்கு.

குண்டுக் கன்னங்கள், கொழுகொழுவென்ற உடல், சுருண்ட முடி அசைய அவரை இறுகக் கட்டிக் கொண்ட குழந்தை, ''தாத்தா! தாத்தா! நீயும் வா...'' என்று அழ ஆரம்பித்தான்.

குழந்தையின் தாயும், தந்தையும் பதற்றத்துடன் அவரருகில் ஓடிவந்து, 'மன்னிச்சுக் கொள்ளுங்க. இவனுக்கு அவங்க தாத்தாதான் எல்லாம்; உங்களைப் பாத்திட்டு அவர்னு நினைச்சுட்டான்'' என்றபோது அவர் சிரித்தார்.

''குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பாங்க. அவங்க தாத்தா ரொம்ப செல்லம் குடுத்திருப் பாரு போல இருக்கு'' குழந்தையைத் தூக்கி நெற்றியில் லேசாக முத்தம் இட்டார்.

''நீ அப்பா அம்மாகூடக் கோவிலுக்குப் போயிட்டு வா கண்ணா, தாத்தா இங்கேயே உக்காந்துகிட்டு இருக் கேன்'' சமாதானம் சொன்னதும் குழந்தை அரைமனதாக எழுந்தது.



''உனக்கு நடக்க முடியலியா தாத்தா? நான் கை பிடிச்சுக்கறேன். எங்கூட வா; கூட்டிட்டுப் போறேன்'' மழலையில் கொஞ்சியது.

''இல்லே கண்ணா! நீ போய்ட்டு வா. எனக்குக் காலை வலிக்குது. தாத்தா சொன்னா கேட்பே இல்லே!''

குழந்தை தலையை ஆட்டியது.

''நீ இப்ப போயிட்டு வா...'' திரும்பிப் பார்த்தபடி பெற்றோரின் கையைப் பிடித்துக் கொண்டான் குழந்தை. அவர்கள் போவதையே பார்த்தபடி அமர்ந்தவர் மனத்தில் கசப்பான உணர்வு மீண்டும் தலை தூக்கியது.

அவருக்குச் சொந்தப் பேரனோ, பேத்தியோ பிறக்கலாம். அந்தப் பேரக் குழந்தை இப்படி ஒரு பாசத்தோடு அவரிடம் வந்து ஒட்டிக் கொள்ளுமா?

குழந்தைகளுக்குக் கள்ளமில்லா உள்ளம் உண்டு என்பதை அவரும் அறிவார். ஆனால் அவரது மருமகள் உள்ளத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் வெறுப்பு என்ற விஷம், குழந்தை உள்ளத்திற்குப் பரவ எத்தனை விநாடிகள் தேவைப்படும்?

ஏன் இவ்வளவு பெரிய ஆண் பிள்ளை, படித்தவன், உலக அனுபவம் கொண்ட இளைஞன் நரேந்திரன். அவனே பெற்ற தகப்பனிடம் பாசத்தை ஒழித்துவிட்ட பிறகு...? அவர்கள் இருவருக்கும் பிறக்கப் போகும் குழந்தையா இவரிடம் அன்பைப் பொழியப் போகிறது?

சுகுணா வேறு குடும்பத்திலிருந்து வந்தவள். அவள் மீது முழுவதுமாக அவர் குற்றம் சாட்டத் தயாராக இல்லை.

புக்ககத்தில் நடந்து கொள்ளும் முறைகளைப் பற்றியோ பழக்க வழக்கங்களைப் பற்றியோ எடுத்துக்கூறி அவளை வழிப்படுத்த மாமியார், நாத்தனார் அல்லது நரேந்திரனது உறவு வழிப் பெண்கள் எவருமே இல்லை.

தந்தையும் மகனும் உள்ள அந்தச் சிறு குடும்பத்தில் அவளாகவே தெரிந்து கொண்டு அன்புடன் வாழக் கற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவளுக்கு அதற்குத் தேவை யான பொறுமை இல்லை.

மேகநாதன் மெல்ல முறுவலித்தார். சுகுணாவிற்கு வாழ்க்கையில் வாழ்ந்துவிட வேண்டும் என்ற துடிப்பு. விதம் விதமாக உடுத்தி, வேடிக்கை விநோதங்களில் ஈடுபட்டு, சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்க வேண்டும் என்ற ஆவேசம்.

கடைகளுக்குப் போனால், காய்கறிகள் வாங்குவதில் அவளுக்கு நாட்டம் இராது. அருகில் உள்ள துணிக்கடை, பாத்திரக் கடை, நகைக்கடை என்று புகுந்து புறப்பட்டு விடுவாள்.

''புதுசா வந்திருக்கும் இந்த பேஷன்லே தூப்சாவ்னு பேரு. எத்தனை அழகான 'டபுள்ஷேட்' பாத்தியா நரேன். மயில் கழுத்துப் புடவைபோல் ரெண்டு நிறம் பச்சையும் நீலமுமாக... அழகா இல்லே...'' பொரிந்து கொட்டுவாள்.

பண்டிகை நாட்களில் என்ன பலகாரம் செய்வது, எப்படிக் கொண்டாடுவது என்ற கவலையெல்லாம் அவள் பட்டதே இல்லை. என்ன வாங்குவது என்பதே அவளது கவலை.

ஒருமுறை அவளது பிறந்தநாளை ஆபீஸ் தொல்லை யில் நரேந்திரன் மறந்துவிட்டிருந்தான், அவ்வளவுதான்.



வீடு, இரண்டு படும் அளவு விஷயம் விபரீதமாகி விட்டிருந்தது. இரண்டு நாள் முகம் கொடுத்துப் பேசாமல் அவள் அவனை நரகவேதனைக்கு உள்ளாக்கிய விஷயம் மேகநாதனுக்குத் தெரியும்.

'சிறுசுங்க' அப்படித்தான் இருக்கும் என காணாத பாவனை காட்டிவிட்டு தலையிடாமல் இருந்து விட்டார்.

மூன்றாம் நாள் அமெரிக்கன் ஜார்ஜெட் சேலையில் அவர்களிவிருவருக்கும் சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகி விட்டதைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

ஒருவேளை திருமணம் ஆகி எல்லோரையும் போல ஒரு குழந்தை பிறந்து விட்டிருந்தால் சுகுணாவின் குணம் மாறி இருக்குமோ?

''தாத்தா! தாத்தா?'' என்று பேரனோ, பேத்தியோ அவரது மடியில் கொஞ்சி விளையாடி வாழ்வில் ஆனந்தத்தை கொடுத்திருப்பார்களோ? சுகுணாவும் நரேனும் அவரிடம் சற்று மரியாதையுடன் நடந்திருப்பார்களோ...?

''நாமிருவர் நம்மைப்போல் இருவர்'' என்ற இந்தக் காலத்தில் பிறந்தவர்கள் அவர்கள். இனி ''ஒன்றே பெறுக அதிலும் நன்றே பெறுக. அன்றே பெற வேண்டாம்'' என்ற கொள்கையை அனுசரித்து விட்டவர்கள்.

''பேரனாவது பேத்தியாவது... தலைமுறை இடை வெளியை இட்டு நிரப்ப எங்கே முடியப் போகிறது?'' பெருமூச்சு விட்டார் மேகநாதன்.

''என்ன மேகா! தனியா உக்காந்திட்டே! உன்னை எங்கெல்லாம் தேடறது?'' சுந்தரத்தின் பலத்த குரல்.

சிந்தனை கலைந்தவராய் தலையை அசைத்தார். ''காத்து நல்லா வருது. இப்படி உக்காரலாம்னு நினைச்சேன்.''

''உன் வீட்டுப் பக்கம் போனேன். வழக்கம் போலக் குரல் குடுத்திட்டு நின்னேன்'' அவர் சொல்லாமல் விட்டது இதுதான்.

''உன் மருமகள் சுகுணா வெளியே வந்து 'அவர் போய்ட்டாரு' என்று வெடுக்கெனக் கூறி விட்டுக் கதவை மூடிக் கொண்டு விட்டாள்.''

சுந்தரத்திற்கு மருமகள் விஷயம் தெரியாதா என்ன? பார்க்கப் போனால் மேகநாதனைவிட அவர் அனுபவ சாலி. இரண்டு மருமகள்களுக்கிடையே பந்தாடப்படுவார் அவர். அத்தோடு மருமகனிடம் வேறு அவ்வப்போது அவதிப்பட்டு மீண்டவர்.

''ஊர்ல என் பேர்ல ஒரு வீடு இருக்கப்பா. கிராமத்து வீடுதானே அதை வித்தால் நல்ல விலை கிடைக்கும்னு மருமகன் உபதேசம் செய்யறான். ஏன் தெரியுமா? சட்டப்படி ஒரு பங்கு சொத்து என் பொண்ணுக்கு. அதை வாங்கி அப்படியே பிஸினஸில் போடணுமாம். அந்த துடிப்பு அவனுக்கு. மருமகள்கள் எண்ணம் வேறு.

மேகநாதனுக்கு அதுவும் தெரியும். சிறியவள், ''நான் சின்னவ. அப்பா மூத்தவகிட்டத்தான் இருக்கணும்'' என்று தள்ளி விடுவாள். பெரியவள், ''எப்பவும் ஒரே இடத்தில் இருந்தா போர் அடிக்காது?'' என்று சின்னவள் வீட்டிற்கு அனுப்பப் பார்ப்பாள்.

உள்ளூரிலேயே மகன்கள் இருந்துவிட்ட தொல்லை வேறு அவருக்கு.



''வீட்டை வித்தாலும் பணத்தைக் கொடுத்திடாதே'' மேகநாதன் உபதேசித்தார். அடிக்கடி இருவருமே பலமுறை ஓட்டலுக்குக் கூட்டாகச் சென்று பசியாறியதும் உண்டு.

''என்னப்பா சிரிக்கிறே?'' சுந்தரம் கேட்டபடி பக்கத்தில் அமர்ந்தார்.

''சிரிக்காம என்ன அழவா முடியும்? நாமும்மேல் நாட்டுக்காரங்களைப் போலத் தனிமையில் வாழக் கத்துக்கணும். சுந்தரம், இந்த பந்தம், பாசம் எல்லா வற்றையும் துடைச்சி எறிஞ்சிட்டுப் போயிடணும்'' வெறுப்புடன் கூறிய அவரை உற்றுப் பார்த்தார் சுந்தரம்.

''ரொம்ப சரி. ஆனா, அதே மேல் நாட்டுக்காரங்க இப்ப நம்மளைப் போல, கூட்டுக் குடும்பமா வாழணும்னு ஆசைப்படறாங்க. இதுக்கு என்ன சொல்றே...''

''கூட்டுக் குடும்பமா வாழாட்டாக்கூட பரவா யில்லே சுந்தரம். அவங்களைப் பெத்த தகப்பனையோ தாயையோ பாரமா நினைக்காம வாழக் கத்துக்கிட்டா சரி'' மனத்தினுள் பரவிய கசப்பு வார்த்தைகளில் வடிந்தன.

பணம், பதவி எதையும் அவர் கேட்கவில்லை. ஏன் முதுமைக் காலத்தில் தேவைப்பட்ட ஓய்வு...? அதைப் பற்றிக்கூட அவர் பெரிதும் பாராட்டவில்லை. ஓடியாடி உழைக்கத் தயாராக இருந்தார். 'கண்ணன் என் சேவகன்' என்ற பாரதியார் பாடலில் வருவதைப் போல, எல்லாமாக இருக்க அவர் உடன்பட்டிருந்தார்.

ஆனால், அன்பு ஒரே ஓர் அன்பான சொல் ''அப்பா! உங்களுக்கு என்ன வேணும்? நீங்க எப்படி இருக்கீங்க?'' ஊஹூம். அந்த வார்த்தைகளின் மூலம் எங்கே பாசம்

ஒட்டிக் கொண்டு விடுமோ என்ற பயமோ அவர்களுக்கு? கண் இமைகளில் லேசாக நீர் சுட்டது.

''தீபாராதனை நடக்குது. புறப்படு'' மணலை உதறிவிட்டு சுந்தரம் எழுந்தார். மணலுடன் பாசத்தையும் உதற முயன்றவராய் மேகநாதன் எழுந்து கோவிலுக்குள் சென்றார்.

விநாயகப் பெருமான் விபூதிக்காக பணிந்தபடி அவரைப் பார்த்து சிரித்ததுபோல் ஒருகணம் மருண்டு போனார் அவர்.

''மகனே! உலக பந்தத்தைத் துறந்துவிடு' என்பதைப் போல திருநீறு பூத்த மேனியாகப் பிள்ளையார் நின்றார்.

## 6

**கா**லை முதல் வீட்டினுள்ளேயே அடைபட்டிருந்ததைப் போல மேகநாதனுக்கு ஓர் இறுக்கமான உணர்வு. முதல் நாள் மாலை சுகுணாவும், நரேனும் அலுவலகத்திலிருந்து திரும்பியபோது, கிளம்பிய விவாதம் காரணமாக ஏற்பட்டிருக்கலாம்.

மேகநாதன் வேண்டா வெறுப்புடன் சாப்பாட்டுத் தட்டைக் கழுவித் துடைத்தார். மனைவியோடு வாழ்ந்த காலத்தில், வீட்டு வேலை என்றால் என்ன என்பதே அறியாதவராய் வாழ்ந்து விட்டிருந்தார்.

''என்னங்க கொஞ்சம் பொறியல் வைக்கட்டுமா? கத்தரிக்காய் பொறியல் உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமே?''



அவர் மனைவி கனகம் அன்புடன் கூறுவது காதில் ஒலித்தது.

''கனகம், இப்ப எனக்கு யார் சொல்லப் போறாங்க அப்படி?'' பெருமூச்சுடன் சோற்றை அள்ளித் தட்டில் போட்டுக் கொண்டு, ஒரு கரண்டி குழம்பும், கறியுமாகப் போட்டார். சாப்பாட்டு மேஜைமீது தட்டை வைத்த போது அவருக்குத் தன் மீதே வெறுப்புத் தோன்றியது.

'பிரிட்ஜை'த் திறந்து செம்பில் இருந்த மோரை எடுத்து அருகில் வைத்தபடி அமர்ந்தார். குழம்பைச் சோற்றுடன் பிசைந்து உருட்டி வாயில் போட்டதும், மனைவி நினைப்பு அவரது நெஞ்சை அடைத்தது.

''ஒரே காரமா சாப்பிடாதீங்க. வாயெல்லாம் புண் வந்திடும். ராத்திரியில் பால் சாப்பிடவும் மாட்டேன்னு மறுக்கறீங்க'' கனகம் கடிந்து கொள்வாள்.

சிந்தாதிரிப்பேட்டை ஒண்டுக் குடித்தனத்தில் ஒரே அறைக்குள், எத்தனை மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். நரேந்திரனது வீட்டைப் போல, சோபா, டி.வி. சாப்பிட மேஜை என்ற எந்தவிதமான வசதிகளும் இல்லாமல், ஆனால் நிம்மதியுடன் வாழ்ந்தார்கள்.

கனகத்திற்கு மட்டும் ஒரே ஒரு குறை. இயல்பாக எல்லாப் பெண்களுக்கும் ஏற்படக்கூடிய குறை. பிள்ளை இல்லையே என்ற ஏக்கம்.

'நம்ம குலம் விளங்க வேண்டாமா?'' கனகம் போகாத கோவில்கள் இல்லை. நோற்காத நோன்புகள் இல்லை. ''ராமேஸ்வரத்துக்குப் போய் கணவன் சமேதரா கடல்லே முழுகிட்டு வந்தா... பலன் கிடைக்குமாம்'' கனகம் கூறியபோது அவருக்கு எரிச்சல் வந்தது உண்மை.

''குழந்தை இல்லாட்டி என்ன கனகம்? நம்ம தலையிலே அப்படின்னு எழுதி இருந்தா நீயும் நானும் என்ன செய்ய முடியும்! இதுக்காகக் காசி எங்கே, ராமேஸ்வரம் எங்கேன்னு தேடிக்கிட்டுப் போக முடியுமா?'' மறுத்துப் பார்த்தார்.

கனகம் அவரிடம் கெஞ்சிக் கூத்தாடி வெற்றி அடைந்து விட்டாள். ராமேஸ்வரத்தின் அருளோ என்னவோ, கனகம் தாய்மை அடைந்தபோது மட்டிலாப் பெருமகிழ்ச்சி பொங்கியது.

''பொறக்கிறது எதுவானாலும் நம்ம குழந்தை. நமது குலம் விளங்க வந்ததுன்னு இருக்கணும்'' ஆரம்ப முதலே அவர் எச்சரிக்கத் துவங்கி இருந்தார்.

கனகத்தின் ஆசைகள், எதிர்பார்ப்புகள் என்ன என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். கனகம் விரும்பிய படி ஆண் குழந்தை, கஷ்டப் பிரசவம்தான். கனகத்தின் ஆசை நிறைவேறி விட்டது என்று நிம்மதி பெருமூச்சு விட்ட சமயம்...? கனகத்தின் அந்த ஆசை, கடைசி ஆசை யாகிப் போகும் என்பதை அவர் கண்டாரா என்ன?

''நல்ல வேளை கனகம் நீ உயிரோட இல்லே, இருந்தா...?'' அவர் உதடுகள் நடுங்கின. உருட்டிப் போட்ட சோறு தொண்டைக்குள் சிக்கி, இறங்க மறுத்தது.

வயதான காலத்தில் மகன் உதவுவான் என்பது இந்தக் காலத்தில் எத்தனை தவறான கணிப்பு...? மகன் மகள் என்பதெல்லாம் அவரவர் கொடுப்பினைப்படிதான் அமையும். அவர் வயது ஒத்த இதர நண்பர்களின் வாழ்க்கையிலிருந்து அவர் பல படிப்பினைகளைத் தெரிந்து கொண்டிருந்தார்.



'மகன்தான் சரியா இல்லே, மகளிடமாவது இருக்கலாம்னு நினைச்சேன். அங்கேயும் மருமகன் வேற்று மனுஷனாக்கிட்டான்'' என்று புலம்புபவர்களைப் பற்றி அவர் அறிந்தார்.

''வயதானவங்கன்னு வேலை வெட்டி செய்யாம சதா கட்டிலிலேயே கிடந்து ஓய்வெடுத்துக்கணுமா? போட்டதைச் சாப்பிட்டு, முடிஞ்ச வேலையைச் செய்யலாமே?'' என்பது இந்தக் கால மனோபாவம்.

ஒரு சமயம், 'வயசாச்சு' என்ற சாக்கில் காலை நீட்டிக் கொண்டு அமர்ந்தபடி பிறரை ஏவிக் கொண்டிருக்கும் வயதானவர்கள் சிலர் இருக்கலாம். அவர்களால் ஒட்டு மொத்தமான பழி வயதானவர்களுக்கு வந்து விட்டிருக்கலாம்.

''உங்க பாடெல்லாம் தேவலைப்பா. எனக்கு மனைவி இருக்கா. கொஞ்சம் காது கேக்காது. அது ஒரு விஷயத்தில் அவளுக்கு நல்லதாப் போச்சு! ஆனா, மருமக இட்டறது என் காதில் விழுதே?'' அலுத்துக் கொண்டார் ஒரு நண்பர்.

''நல்ல காலம், கனகம் இருந்திருந்தால் அவளுக்கும் இந்த கதிதான் ஏற்பட்டிருக்குமோ?''

கடந்த ஒரு சில தினங்களாக முணுமுணுப்புடன் ஆரம்பமான விவாதம் நேற்று அவர் காதுபடவே அடி பட்டது, அதே சாப்பாட்டு மேஜை அருகில்.

கனகத்தின் மூன்று பிரி சங்கிலிக் கொத்தை அவர் பாங்க் லாக்கரில் வைத்து விட்டிருந்தார். அவளது ஞாபகார்த்த சின்னம் என்பது மட்டுமல்ல. அவர் உத்தியோக உயர்வு பெற்று, முதல் முதலாக 'போனஸ் பணத்தில் வாங்கிய நகை என்ற காரணமும்கூட.

''மாசம் பிறந்தா வட்டி கட்டிடணும்கிறே. பிறகு வீட்டில செலவுன்னா எப்படிப் பணம் வரும்?'' சுகுணா சீறினாள்.

''வீட்டு மேலே வாங்கின கடனை எப்படியாச்சும் அடைச்சிட்டா நமக்குத்தானே நிம்மதி? இப்பக் கஷ்டப் பட்டாலும்...''

தேவையில்லாத கஷ்டம். ஏன் வேண்டாத பொருள் இருந்தா விக்கிறது? அது இருந்து என்ன லாபம்?''

மனைவியின் பேச்சின் பொருள் விளங்காதவனாய் விழித்தான் நரேந்திரன். டி.வி. பிரிட்ஜ் எல்லாம் பார்த்துப் பார்த்து வாங்கிய பொருட்கள்.

''இன்னுமா விளங்கலை?'' மோரை விட்டுச் சோற்றைப் பிசைந்தவள் கணவனை உற்றுப் பார்த்தாள்.

''உங்கம்மா சங்கிலி, லாக்கர்ல தூங்குது இல்லே?'' மேகநாதன் அதிர்ந்து போய் மருமகளைப் பார்த்தார். நரேந்திரன் அவமானத்தில் முகம் கறுக்க மனைவியை முறைத்தான்.

''ரொம்ப முறைக்காதே? நானா கழுத்திலே பூட்டிக் கிட்டு ஆபீஸ் போறேன்? லாக்கர்ல கிடக்குது.''

இந்தக் காலத்திலே தங்கச் செயினை கழுத்திலே பூட்டிக்கிட்டு போனா கழுத்தோட கொண்டுகிட்டுப் போயிடுவான்'' மேகநாதன் சற்று எரிச்சலை அடக்கியபடி கூறினார்.

''அதனாலேதான் சொல்றேன். அனுபவிக்க முடியாத பொருள். முப்பது பவுன் சங்கிலி, பணமா இருந்திச் சின்னா... கடனாவது அடையுமே?'' சுகுணா சுருக்கெனக் குத்தினாள்.



தட்டிலிருந்த சோற்றை அளைந்தபடி நரேந்திரன் தலை குனிந்தான். ''எங்கம்மாவோட ஞாபகத்துக்காக விட்டு வச்சிருக்கிற ஒரே சின்னம் அந்த சங்கிலிக்கொத்து. அதை விக்க முடியாது'' என்று அடித்துப் பேச அவன் ஏன் முன் வரவில்லை?

மேகநாதனின் எரிச்சல் பீறிக்கொண்டு வந்தது. ''ஏம்மா! அந்த சங்கிலியை வித்துத்தான் உங்க கடனைத் தீக்கணுமா? ரெண்டு பேர் சம்பாதிக்கிறீங்க, ஒழுங்காக் குடித்தனம் செய்து மிச்சம் பிடிச்சா கடன் அடைஞ்சிடுமே? மேலும் விக்கறது சுலபம், வாங்கறது கஷ்டம்'' என்றார் உறுதியுடன்.

சுகுணாவிற்கு அது போதாதா?

'தெரியுமே? உங்களுக்குக் குடுக்க மனசு வராதுன்னு. உங்க மகன்தானே கஷ்டப்படறார்னு உங்களுக்கே புரியலேன்னா சரி. ஆனா ஒண்ணு மட்டும் நினைச்சுக் கொள்ளுங்க. இந்த வீட்டுலதான் நீங்களும் இருக்கீங்க. வெளியில இல்லே'' படக்கெனச் சாப்பாட்டை உதறி விட்டு எழுந்துவிட்டாள்.

''இந்த வீட்ல எனக்கும் உரிமை உண்டு. நானும் பணம் கொடுத்திருக்கேன்' என்று கத்த வேண்டும் போன்ற உணர்வு, மேகநாதன் தன் மகனைப் பார்த்தார்.

''எங்கப்பா குடுத்த பணத்திலதான் வீட்டு அஸ்திவாரமே உருவாகி இருக்கு'' என்று சொல்ல முடியாத கோழை அவன். ஹூம் அப்படியே சொன்னாலும், சுகுணா காது கொடுத்துக் கேட்கக் கூடியவளா?

மாத சம்பளத்தில் கணிசமான வெட்டு விழுந்து அவளது கையைக் கடிக்கிறதே என்ற ஆத்திரம். விருப்பப்

படியெல்லாம் கடைகளில் புகுந்து சேலையும், பாத்திரமு மாக வாங்கிக் குவிக்க முடியவில்லையே என்ற ஆவேசம் அவள் மருகிக் குமைந்து கொண்டிருந்தாள். அவளிடம் பேச்சுக் கொடுப்பது எரிமலையைக் கிளறி விடுவதைப் போல என்பதை நரேன் உணர்ந்திருப்பான்.

மனைவிக்குப் பயந்தவனிடம் இனி எதை எதிர்பார்த்து அவர் வாழ முடியும்? கை, கால்கள் திடமாக இருந்து பிறர் உதவி நாடாமல் வாழும்போதே அவர் நிலைமை இப்படி. இனி தள்ளாமையால் நோயுற்றுப் படுக்கையிலும் விழ நேர்ந்து விட்டால்...? அச்சத்தால் அவர் உடல் நடுங்கியது.

வேகமாக மோரைத் தட்டில் வார்த்தவர் ஒரே வாயாக அள்ளிப் போட்டுக் கொண்டார்.

## 7

நரேந்திரன் அலுவலகத்திற்குப் புறப்பட தயாராக இருந்தான். புதிதாக வாங்கப் போகும் ''வாஷிங் மெஷினை''ப் பற்றிய அபிப்பிராய பேதம் இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

சுகுணாவிடம் ஒரு கெட்ட பழக்கம் உண்டு. புதிது புதிதாக விளம்பரங்களில் தென்படும் எல்லாவித நவீன சாதனங்களையும் வாங்கி வீட்டில் நிரப்பிவிட ஆத்திரப் படுபவள்.

''கலர் டி.வி. லோன் முடிஞ்சிட்டுது. வாஷிங் **மிஷின் வாங்கலாம்னு இருக்கேன்.''**



''முதல்லே வீட்டுக் கடன் முடியட்டும் சுகுணா. பிறவு மேல இதுகளை வாங்கிக் குவிக்கறதில் அர்த்தமே இல்லை'' மனைவியை அடக்கிப் பார்த்தான் நரேந்திரன்.

''நரேன்! நான் ஏற்கெனவே சொல்லிட்டு வந்திட்டேன். நீ வாங்கித்தான் ஆகணும். இல்லாட்டி எனக்கு மெத்த அவமானம்'' கோபத்துடன் கூறினாள் சுகுணா.

''டி.வி. வாங்கணும்னே இப்ப பாதி நாள் அதைப் பார்க்கக்கூட நமக்கு நேரம் இல்லாம ஓடிக்கிட்டிருக்கோம்.''

மேகநாதனுக்குச் சிரிப்பு வந்தது. பொழுது போகாமல் வீட்டில் இருப்பவருக்கு டி.வி. நிகழ்ச்சிகள் உபயோகமாகும் என்பதை இருவருமே எண்ணிப் பார்க்கவில்லை.

ஒருமுறை டி.வி.யைப் போட்டு அவர் நாடக நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்து கொண்டிருந்துவிட்டார். சுகுணாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

''ஏற்கெனவே தலைவலி மண்டையைப் பிளக்குது. கண்ட கண்ட புரோகிராம்களையெல்லாம் பார்த்துக் கிட்டு...'' பற்களைக் கடித்தாள்.

''ஏம்ப்பா, 'வயலும் வாழ்வும்' முதல் எல்லா நிகழ்ச்சிகளையும் பார்க்கணும்னு நினைக்கிறீங்க?''

மகன் தன் பங்குக்குக் குத்தினான்.

அவர் வாய் துடித்தது. நாவைக் கட்டுப்படுத்தியவராக இருந்துவிட்டார். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, டி.வி.யை விரலாலும் தீண்டுவதில்லை. பல சமயங்களில் இரவு ஒன்பதரைக்கு மேல் மருமகள் டி.வி.யை பெரிதாக வைத்துக் கொண்டு ரசிப்பாள். அவர்கள் பணம் போட்டு வாங்கியது. அனுபவிக்கிறார்கள். அவர் யார் கேட்பதற்கு!

இப்போதும் சலவை இயந்திரம் பற்றி மத்தியஸ்தம் செய்ய அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? அடித்துப் பேசினால், அவரிடமே பணம் கேட்டுவிடுவாள் சுகுணா! பணம் என்று வந்துவிட்டால் அவளுக்கு மானம் வெட்கம் எதுவுமே பிரச்னையாகத் தெரியாது.

நல்லவனுக்கு அடையாளம் சொல்லாமல் போவது என்று தீர்மானித்தவராய் வெளியே கிளம்ப வழி தேடிக் கொண்டிருந்தார்.

கலர் டி.வி., வாஷிங் மிஷின், இனி அடுத்தது ஒரு வீடியோவும் தேவைதான். ஊரில் இருக்கிற சினிமாப் படங்களைப் பார்க்க வெளியே போகவேண்டாம். அதற்கு பதில் வீட்டிலேயே பெரும் கூட்டம் சேரும்.

இப்போதெல்லாம் அடிக்கடி அவர் வெளியே சாப்பிட நேருவதால், கையில் கொஞ்சம் பணம் தேவைப் பட்டது. மகனும், மருமகளும் அலுவலகத்திற்குப் புறப்பட்டுப் போன பிறகு 'பாங்க்' வரை நடந்து செல்லலாம் எனத் தீர்மானித்துக் காத்துக் கொண்டிருந்தார்.

''நரேன்! நான் சொல்றதைக் கேளு. முதல்ல அந்த வாஷிங் மிஷினைப் பார்ரு. பிறகு நீயே வாங்கிடுன்னு சொல்வே'' சுகுணா கூறிவிட்டு, சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

இன்னும் இரண்டு நாட்களில் சலவை செய்யும் இயந்திரம் அந்த வீட்டிற்குள் நுழைந்துவிடும் என்பதை அவர் அறிவார். ஆனால் அவரது துணிகளுக்கு அந்த இயந்திரம் இடம் கொடுக்காது. ஏனெனில் அவர் அழுக்குத் துணிகளை அணிபவராயிற்றே!

ஒருமுறை மேகநாதன் அவசரமாக வெளியே சென்று கொண்டிருந்தார். சாதாரணமாகவே அவர் உடை



விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தும் ஆசாமி அல்ல. அதிலும் அன்று, அவசர நிமித்தம் பணம் எடுத்து வருவதற்காக 'பாங்க்' மூடிவிடும் என்ற பதைப்பில் கையில் கிடைத்ததைப் போட்டுக் கொண்டு கிளம்பிவிட்டார்.

வீடு திரும்பிய பிறகுதான் அவருக்கு தமது ஷர்ட் காலரின் ஓரம் கிழிந்திருந்தது பற்றித் தெரிய வந்தது.

அன்று மாலை நரேந்திரனிடம் எவ்வளவு பெரிய புகார் பட்டியல் படிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்ததும் பெருத்த அவமானத்திற்குள்ளானார் அவர்.

''ஏம்ப்பா! எதுக்காக இப்படி காலர் பிசுபிசுத்த ஷர்ட்டைப் போட்டுக்கிட்டு ஊர் சுத்தறீங்க?'' மகன் வெடு வெடுத்தான்.

''முதல்ல சுகுணா சொன்னா. நானும் கேக்காம இருந்து வந்தேன். இப்ப கண்ணாலேயே பாத்திட்ட பிறகுதான் உண்மைன்னு நம்பறேன். நல்லா உடுத்திக்கக் கூடாது? எதுக்கு இப்படி வேஷம் போடுறீங்க?'' கடுமையாகப் பேசினான்.

அவர் மெல்லச் சிரித்துவிட்டு, ''காலர் கிழிஞ்சது தானேப்பா? எனக்கு எதுக்கு இனிமே இந்த அலங்காரம் எல்லாம்?'' என்றார் மெதுவாக.

''என்ன இருந்தாலும் நீங்க செஞ்சது தப்புத்தான். பொறுப்பான பதவியில் இருக்கிறாரு உங்க மகன். நான் ஒருத்தி இருக்கேன். உங்களுக்கு நல்ல ஷர்ட் வாங்கித் தராம இருந்திட்டோம்னு கெட்ட பெயர் வாங்கித் தரணும்னு செய்திருப்பீங்க'' சுகுணா வெடித்தாள்.

மேகநாதன் தாடை இறுக வார்த்தைகளை விழுங்கிக் கொண்டார். ஊருக்காகப் பால்குடிப்பவர்கள் இவர்கள்.

தன் உடம்பிற்காகப் பால் குடிக்காதவர்கள். அப்படிப் பட்டவர்களிடம் பேசிப் பயன் என்ன?

அந்த சம்பவத்திற்குப் பின்னரும் சுகுணா அடிக்கடி அவரிடம் குற்றம் காணத் துவங்கி இருந்தாள்.

''உங்கப்பாவை அந்த பானிபூரி கடைகிட்ட பாத்தாளாம் என் ஆபீஸ் தோழி லீலா. தள்ளுவண்டியில் வியாபாரம் செய்துகிட்டுப் போறவங்க கடை. நடை பாதையில் நின்னுகிட்டு இவருக்கு வாங்கித் தின்ன வேண்டிய அவசியம் என்ன?''

மகனுக்குத் தந்தை பேரில் சினம் பொங்கியதில் வியப்பில்லை. ''எதுக்கப்பா இப்படி செய்யறீங்க?'' தலையில் அடித்துக் கொண்டான்.

''உன் மனைவி வீட்டுச் சாமான்களை அளந்து வைக்கிறாள். நான் சமையல் செய்தாலும் அளந்து கொடுத்துவிட்டு ஸ்டோர் ரூமை பூட்டி பீரோ சாவிக் கொத்தைக் கைப்பையில் போட்டுக் கொண்டு போய் விடுகிறாள்'' என்ற உண்மையைப் புட்டு வைக்க அவர் மனம் விரும்பவில்லை.

சேற்றில் கல் எறிந்தால் தம் முகத்தில்தானே தெரிக்கும்? சுகுணா அழுது ஆகாத்தியம் செய்து தன் கட்சியை ஜெயித்துக் கொண்டு விடுவாள். மேகநாதன் எதற்காகச் சேற்றைப் பூசிக் கொள்ள வேண்டும்?

வழக்கம் போல மருமகளுக்கும், மகனுக்கும் டிபன் டப்பாக்களை எடுத்துப் பையில் போட்டார். ''கையில் குடை இருக்கட்டும். ஏன்னா திடும்னு மழை வந்துடுது பாரு'' என்று உபசரித்தார்.

சுகுணா முகத்தைக் குலுக்கியபடி, அறைக்குள் சென்று மறைந்தாள். சற்று நேரத்தில் ஸ்கூட்டரில்



இருவரும் அலுவலகம் சென்றபின், அவரும் புறப் பட்டார்.

''பாங்க்'' வேலையை முடித்துக் கொண்டு, திரும்பிய வரை யாரோ பின்னால் அழைத்த ஒலி, சட்டென நின்றார் சுந்தரம்!

''உன்னைத் தேடிக்கிட்டு வீடு வரை போனேன்,'' மூச்சு வாங்கியது அவருக்கு.

''நீ போட்ட பிளான்படி ஒரு சின்ன வீடு ஏற்பாடு செய்திடலாம்.''

''நிதானமாப் பேசு... இரு'' எனத் தயங்கியவர் நிமிர்ந்தார். எதிரே நின்ற ரெஸ்டாரெண்ட் பலகை கண்ணில் பட, 'வா, காப்பி, டிபன் சாப்பிட்டபடி பேசுவோம்' என்றார்.

ஓட்டலின் குடும்ப அறைப் பகுதிக்குள் நண்பர்கள் இருவரும் சென்று அமர்ந்தனர். மசால் தோசை, இட்லி, வடை என்று தாராளமாக ஆர்டர் கொடுத்துவிட்டுப் பேச்சைத் துவக்கினார் சுந்தரம்.

''தாம்பரத்தில் நான் சொன்ன ஆசாமி இருக்கார். நான் விஷயத்தை சொன்னதும் அவர் சரின்னிட்டார். முதல்ல பத்தாயிரம் ரூபாய் கொடுத்திடணுமாம்.''

மேகநாதன் கவலையுடன் கணக்குப் போட்டுக் கொண்டார். அவரது கையிருப்பிலிருந்து கணிசமான வெட்டு.

''யோசிக்காதே மேகா! இது நயனான இடம். இதை நழுவவிட்டா வாய்ப்புப் போயிடும். வேற யாராவது பிடிச்சிடுவாங்க...'' தூண்டினார் சுந்தரம்.

''சரி. நீ ஏற்பாடு செய்த பிறகு நான் மறுப்பு சொல்ல என்ன இருக்கிறது! எதுக்கும் ஒரு நல்ல நாள் பாத்திடு.''

''உன் மகனுக்கும், மருமகளுக்கும்...'' இழுத்தார் சுந்தரம்.

''இப்ப எதுக்கு அவங்களுக்குத் தெரியணும்? சமயம் வரும்போது சொல்லிக்கலாம்'' தோசையும், இட்டிலியும், வடையும் அவர்களது சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

## 8

அந்த வார விடுமுறை நாளில் சுகுணாவின் திட்டம் வேறாக இருந்தது. வாஷிங் மிஷின் வாங்கினதைத் தோழிகளிடம் காட்டிப் பெருமை அடித்துக் கொள்வதற்கு சரியான சந்தர்ப்பம். அதே சமயம் வீட்டிலேயே சினிமாப் பார்த்தோம் என்ற பெருமையும் கிடைக்கும்.

முதல் நாளிரவு மெல்லக் கணவனிடம் சொன்னாள்.

''நாளைக்கு நாம வெளியே போக வேணாம்?''

நரேந்திரனுக்கு உண்மையிலே சந்தேகம் வந்து விட்டது. வாரமுடிவில் சினிமா, வெளியே சுற்றுதல் என்று அலையும் சுகுணாவா இப்படிப் பேசுகிறாள்? அப்படி வெளியே போகாவிட்டால் தலையே வெடித்து விடுவது போலத் தவித்துப் போவாளே...

''வாஷிங் மிஷின் கடன் அடையணும். அதனால் வேற திட்டம் வச்சிருக்கேன்.''



''என்ன சொல்றே நீ?''

''என் தோழி ஒருத்திகிட்டே வீடியோ காட்ற வி.ஸி.ஆர். இருக்காம். அதை எடுத்துக்கிட்டு இங்கே வர்றதா சொல்லி இருக்கா...''

''டேப் வேணாமா?''

''அதை நான் ஏற்பாடு செய்யறதா சொல்லிட்டேன். நாளைக்கு நீ போய், புதுசா மூணு தமிழ்ப் படங்க வாங்கிட்டு வந்திடு நரேன்'' கொஞ்சலாக அவன் மீது சாய்ந்தபடி வேண்டுகோள் விடுத்தாள்.

''நிறைய பேர் வருவாங்களா? அப்ப மூணுபடம் பாக்கணும்னா, வீட்ல ஏதாவது காப்பி, டிபன் தயார் செய்ய வேணாமா?'' சிறிது கவலையுடன் கேட்டான் நரேந்திரன்.

கணவனின் முன் நெற்றி முடியைக் கோதியபடி, ''அதப்பத்திய கவலையை என்கிட்ட விடு நரேன். நான் பாத்துக்கறேன்'' கணவனை வழிக்குக் கொண்டு வந்த மகிழ்ச்சியில் அவன் மீது ஒய்யாரமாக சாய்ந்து கொண்டாள் சுகுணா.

மறுநாள் விடியலில் மேகநாதன் எழுந்து குளித்துச் சுத்தமாக உடை உடுத்தி இருந்தார். பூஜை அறை என்பது அந்தச் சிறிய வீட்டில் நிறைவேறாத ஒரு வசதி. சமையலறையின் ஒரு பக்கத்து சுவரில் தெய்வங்களின் படங்கள் இருந்தன. படங்களைத் துடைத்து பொட்டிட்டு பூ வைப்பது அவரது வேலை. ஏன் பல சமயங்களில் விளக்கேற்றுவதும் அவரது வேலையாகத் தானிருந்தது.

அவர் மனைவி கனகத்தின் மறைவு நாள் ஒவ்வொரு வருடமும், அவர் அவளது நினைவாக, மல்லிகைப் பூ மாலை வாங்கி அவளது படத்திற்குச் சூட்டுவது வழக்கம்.

மற்றபடி, திதி போன்ற விஷயங்களை குறைத்துக் கொண்டு விட்டிருந்தார். மருமகள் வந்த பின்பு அறவே நிறுத்தியும் விட்டார்.

''எனக்கு இந்த மாதிரியான திதி விஷயங்களிலே நம்பிக்கை கிடையாது'' என்று சுகுணா அடித்துச் சொல்லி விட்டாள்.

கனகத்திற்கு மல்லிகைப் பூ என்றால் உயிர். 'அவர்கள் சிந்தாதிரிப்பேட்டை வாழ்க்கையில், தினம் ஒரு பொட்டலம் மல்லிகைப் பூ வாங்காமல் அவர் வீடு திரும்ப மாட்டார். அதேபோல் அவளது கடைசிப் பயணத்திற்கு மல்லிகைப் பூவாலேயே அலங்காரம் செய்து வழியனுப்பி வைத்துத் தம் துயரைத் தணிக்க விரும்பினார்.

அம்மாவின் நினைவு நாளன்று நரேந்திரன் ஒன்றும் சாப்பிட மாட்டான். அவனாகவே ஒரு மல்லிகை மாலையை வாங்கி வந்து அம்மாவின் படத்திற்குச் சூட்டுவான். அது ஒரு காலம். இப்போது? அம்மாவின் நினைவு நாளே அவனுக்கு மறந்தே விட்டது!

பிரிட்ஜைத் திறந்தவர் மூக்கில் மல்லிகை பூவின் வாசனை மோதியது. 'ஏது' இந்த வாட்டி அம்மா நினைப்பு வந்திட்டதா நரேனுக்கு? பரவாயில்லையே?' ஆச்சரியமும், மகிழ்ச்சியும் ஒருங்கே பொங்கின. மெதுவாக அந்த இலைச் சுருளை நீக்கிப் பார்த்தார். நெருக்கமாகத் தொடுக்கப்பட்ட மல்லிகைச் சரம், மெதுவாக வெளியே எடுத்தவரின் கரங்கள் நடுங்கின.

'கனகம்! உன்மேலே நரேனுக்கு ரொம்பப் பாசம் பார்த்தியா? நான் தான் கோபத்தில் ஏதோ தப்பா நினைச்சுட்டேன் என்று மனத்தினுள்ளே கூறியபடி 'பிரிட்ஜ்' கதவை மூடினார்.



பூஜை நடுவில் காலையில் தன்னால் எடுத்துத் துடைத்து வைக்கப்பட்டிருந்த கனகத்தின் போட்டோ பொட்டிட்டு சந்தனக் கீற்றுடன் சிரித்தபடி அவரைப் பார்த்தது.

''பாத்தியா கனகம். உன் மருமகளுக்குக் கூடச் சொல்லாம பூ வாங்கி வச்சுருக்கான்!'' உவகை பொங்க, மல்லிகையை மாலையாகப் படத்திற்கு அணிவித்தார். விளக்கை ஏற்றி ஊதுவத்திகளைச் செருகி விட்டவர் ஒரு கணம் கண்களை மூடிக் கொண்டார்.

'கனகம்! நம்ம குழந்தை நரேந்திரன் அவன் நல்லபடியா வாழணும். மேன்மேலும் வாழ்க்கையில் முன்னேறி குழந்தையும் குடும்பமுமாக இருக்கட்டும்ணு ஆசீர்வாதம் பண்ணும்மா'' கண்களில் கசிந்த நீரைத் துடைத்தார்.

ஞாயிறு காலை டிபன், காப்பி என்ன என்பதை மருமகள் வந்து தீர்மானிக்க வேண்டும்.

சற்று நேரத்தில் மருமகள் சுகுணா எழுந்து பல் தேய்க்கும் ஒலி கேட்டது. சுடச்சுடக் காப்பியைக் கலந்து சாப்பாட்டு மேஜைமீது வைத்தார் அவர்.

காப்பியைப் பருகியபடி சுகுணா மூக்கை உறிஞ்சினாள். மல்லிகையும், ஊதுவத்தி வாசனையுமாகக் காலை வேளையில்...?

''இன்னைக்கி வெங்காயம் சேக்காத டிபன் செய்திடணும்மா'' மெதுவாக மேகநாதன் துவங்கினார்.

அவள் விழிகளில் கேள்விக் குறி?

''உங்க அத்தையோட நினைவு நாள். வருஷத்தில் இன்னைக்கி ஒரு நாளைக்காவது அந்த இறந்து போன அம்மாவுக்காக நாம் கொஞ்சம் கட்டுப்பாடா இருக்கணும்.''

சட்டென ஏதோ பொறி தட்டியவளைப் போல் எழுந்தாள் அவள். வேகமாக 'பிரிட்ஜைத் திறந்து ''ஆமா இங்கே 'மல்லிப்பூ' பொட்டலம் வச்சிருந்தேனே, எங்கே அது?''

அவளது திடீர் கேள்வியால் குழம்பிப்போன மேகநாதன், ''அப்படின்னா... அது... நரேன்... வாங்கினது இல்லையா...? நீ...'' தயங்கியபடி நின்றார். இது என்ன விபரீதம். இவள் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்கின்றன? கண்களில் அனல் தெறிக்கிறது? அட ஆண்டவா? எதற்காகப் பூஜை அறைப் பக்கம் எட்டிப் பார்க்கிறாள்!

''ரொம்ப அழகா இருக்கு! யாரைக் கேட்டுக்கிட்டு மல்லிகைப் பூவை செத்தவங்க படத்துக்குப் போட்டு வீணடிச்சீங்க?'' விஷத்தைக் கக்கினாள் அவள்.

அவருக்குள் பலமான ஆத்திரம் வெகுண்டெழுந்தது.

''உன்னளவில் அவள் செத்துப் போனவள்தானம்மா. ஆனா, உனக்கு இத்தனை அழகான புருஷனைப் பெத்துக் குடுத்தவங்கறதை மறந்திடாதே!'' அழுத்தமாகக் கூறிவிட்டு அப்பால் செல்ல முயன்றார்.

''என்ன அநியாயம் செஞ்சிருக்காரு நரேன். இங்க வந்து பாரேன்'' கிரீச்சிட்டாள் சுகுணா.

அரைத் தூக்கத்தில் படுக்கையில் உருண்டு கொண்டிருந்த நரேந்திரன், அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி வந்தான். தூக்கம் கலைந்துவிட்ட எரிச்சல் ஒரு புறம் மனைவியின் கோபத்திற்குக் காரணம் எதுவோ என்ற கலக்கம் ஒரு புறமுமாக அவனை அலைக்கழித்தன.

''சுகுணா என்ன நடந்தது?'' பதறினான் அவன்.



''இன்னிக்கி என் தோழிகள் வருவாங்கன்னு சொன்னேனே நினைப்பிருக்கா?''

''வீடியோ படம் பார்க்க வருவாங்கன்னு சொன்னது தானே?''

''ஆமாம், அவங்க வந்தால் இருக்கட்டும்னு நாலு முழம் மல்லிகைப்பூ வாங்கிக் கையோட 'பிரிட்ஜி'ல் வச்சிருந்தேன். அதை உங்கப்பா என்ன செய்திட்டார் தெரியுமா?''

''என்ன செய்திட்டார்?'' பரபரத்தான்.

''ஒண்ணும் செய்யலேப்பா நரேன். இன்னைக்கி உங்கம்மா மகராசி செத்துப் போன நாள். நீதான் உங்கம்மாவை நினைச்சுக்கிட்டு மல்லிப்பூ வாங்கிட்டு வந்திட்டியோன்னு நினைச்சுகிட்டேன்.

நெஞ்சிலே முள் தைத்த வேதனையுடன் நரேன் தந்தையைப் பார்த்தான். அவனைக் குற்ற உணர்வு உலுக்கியது.

''ஏதோ அம்மாவுக்காக முன் ஜாக்கிரதையா வாங்கி வந்திருக்கேன்னு நினைச்சி, உங்கம்மா படத்தை எடுத்து வச்சி, இந்த மல்லிகைப்பூவைப் போட்டுப்பிட்டேன்'' அவர் குரல் தடுமாறியது... தொண்டை கரகரத்தது.

''கனகம்! நாலுமுழப் பூவிற்குக் கணக்குப் பார்க்கிற மனிதர்கள் இவர்கள். நல்லவேளை நீ தப்பி விட்டாய். இல்லாவிட்டால் நாலு நாள் பட்டினி போட்டுவிடக் கூடிய அரக்கர்கள்!'' மனம் துயரத்தால் ஓலமிட்டது.

''உங்களுக்கு வேணுமின்னா வேற பூ வாங்கி இருக்கலாமே அப்பா?''

மகனின் சமாதானம் அவருக்கு எரிச்சலை ஊட்டியது. கேவலம் நாலுமுழம் பூ, அதை உபயோகித்து விட்டாள் தான் என்ன! வேறு போய் வாங்கிவரலாம் என்று மனைவியிடம் கூற முடியாத மகன் அவரிடமல்லவா கேட்கிறான்?

''உண்மைதான் நரேன். உசிரோட இருக்கறவங் களுக்கே மரியாதை இல்லாதப்போ செத்தவங்க படத்துக்கு எதுக்கப்பா மாலையும் மரியாதையும்! இந்தக் கிழத்துக்கு எதுக்கப்பா மாலையும் மரியாதையும்! இந்தக் கிழத்துக்கு அது விளங்கலை'' என்றவர், சமையலறைப் பக்கம் சென்று சுவரில் சாய்ந்தபடி அழலானார்.

## 9

சுந்தரம் நண்பனை உற்றுப் பார்த்தார். 'இனிமே எதுக்காக வேதனைப்படறே? நாமதான் எல்லா ஏற்பாட்டையும் செய்திட்டோம். ஒரு நல்ல நாளும் பாத்து வச்சிட்டேன். உன் மகனுக்கும் மருமகளுக்கும் சொல்லிட்டுக் கிளம்ப வேண்டியது' என்றார் கனிவுடன்.

'வயசு ஆகிட்டு வர்ற சமயம் வேற வீடு கேக்குறா என்று நொடிப்பாள் மருமகள்.''

''சொல்லட்டுமே, உன் கையில் பணம் இருக்குது வாழ்க்கை வாழறதும் வாழாததும் உன் விருப்பம்'' சுந்தரம் சிரித்தார்.

''அந்த தாம்பரம் ஆசாமியை நேரா பார்த்து பேசணுமே விஷயம் ரொம்ப ரகசியமாக இருக்கட்டும், சுந்தரம்.''



''என் திடீர்னு துப்பறியும் கதை மாதிரி கடைசி நிமிடத்தில் எல்லாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தப் போறியா மகா!'' சுந்தரம் குறும்புடன் கண்களைச் சிமிட்டினார்.

''இதில் மர்மம் என்ன வச்சிருக்கப்பா? பிடிக்காத இடத்தில் வற்புறுத்தலாக உக்காந்திருப்பானேன்? எங்கே தனக்கு மனசுக்கு நிம்மதி கிடைக்குமோ அங்கே போய் இருந்துடறது நல்லது இல்லையா?''

''அதெல்லாம் சரிதான். ஆனா, உன்னாட்டம் மனசுக்குள்ளே மூடிவச்சுக்க என்னால முடியாதுப்பா. நான் எல்லார்கிட்டயும் சொல்லிவிடுவேன்'' பயமுறுத்தலாக முடித்தார் சுந்தரம்.

''போகட்டும், அந்த தாம்பரம் ஆசாமியை நாம எப்ப சந்திக்கிறது?''

''நாளைக்கு காலையில் உங்க வீட்டுக்கு அழைச்சு வரட்டுமா?''

''வேண்டாம் சுந்தரம். பிற்பகல் மூணு மணிக்கு அந்த ரெஸ்டாரண்ட் பக்கம் அழைச்சிட்டு வா.''

அன்று பிற்பகல் சுகுணாவிற்கு அலுவலகத்தில் வேலை எதுவும் ஓடவில்லை. வீடியோ படங்களை பேராசையுடன் அடுத்தடுத்து ஓயாமல் பார்த்ததன் விளைவு வேறு. கடந்த ஞாயிறன்று மாமனாருடன் ஏற்பட்ட மோதலில், கிழவர் குணம் கெட்டுபோய் வருகிற எரிச்சல். இது போதாத குறையாக ஸ்கூட்டர் சரிவர ஓடாமல் மக்கர் செய்த ஆத்திரம். எல்லாமாக அவளது தலைவலியை அதிகமாக்கி விட்டிருந்தன.

கணவனது அலுவலகத்தில் புதிதா வந்திருந்த எம்.டி. இருந்த கண்டிப்புடன் காணப்பட்டார். அதனால் நரேந்திரன்

ஆபீஸில் குடிகொள்ளாத குறைவாக வீட்டிற்கு நேரம் கழித்து வந்த கொண்டிருந்தான். இத்துடன் பஸ்ஸில் நெரிசலில் இடிபட்டுக் கொண்டு ஆபீஸ் போகும் தொல்லை.

ஸ்கூட்டரிலேயே சொகுசாக போய் உடை நலுங்காமல் வீடு திரும்பிய சுகுணாவிற்கு பஸ் பயணம் சினத்தை உண்டு பண்ணியது. நரேனும் பஸ்ஸில் வருவான். அதிலயும் எப்பவோ...? அன்று காலை இருவரும் சேர்ந்து பஸ் நிலையத்திற்கு வந்த போது நரேன் சொன்னான்.

''சுகுணா! நீ எனக்காக காத்திருக்காதே. நான் வர நேரமாகலாம்.''

கணவனில்லாமல் அவள் வீடு திரும்பிய முதல் அனுபவம் வேறு. எல்லாமாக ஆவேசத்துடன் வந்தவளின் கண்களில், பஸ் இறங்குமிடத்தின் அருகே இருந்த ரெஸ்டாரண்டின் வாயில் முகப்பு பட்டது.

''ஒரு கப் காப்பி சாப்பிட்டுவிட்டு போனால் என்ன?'' எண்ணமிட்டவளாய், மெல்ல களைப்புடன் நுழைந்தாள். அவளது கண்கள் நாலாபுறமும் நோட்டம் இட்டன. சற்று முன்னதாகவே அவள் 'பர்மிஷன்' கேட்டுக் கொண்டு வந்து விட்டிருந்தாள். ரெஸ்டாரண்டில் கூட்டம் அதிகம் இல்லை.

''குடும்ப அறைக்குள் நுழைந்தவள் அலுப்பு நீங்க அங்கு இருந்த வாஷ்பேஷனில் முகம் கழுவக் குனிந்தாள். அங்கிருந்த தடுப்பின் மறுபக்கத்தில் மிகப் பழக்கமான குரல்...? திடுக்கிட்டவளாய் மெல்ல எட்டிப் பார்த்தவள் ஒரு விநாடி உறைந்து போனாள்.



அவளது மாமனார் மேகநாதன், ஒரு தாடிக்கார மனிதருடனும் அவரது தோழர் சுந்தரத்துடனும் பேசிக் கொண்டிருந்தார். சுந்தரத்தை அவள் அடிக்கடி பார்த்திருக்கிறாள். ஆனால் அந்த தாடி ஆசாமி யார்?

''பத்தாயிரம் ரூபாய் முதல்ல குடுத்திட்டா...'' மேகநாதன் பேசியது அவள் காதில் விழுந்ததும் சட்டென சுதாரித்துக் கொண்டாள்.

''நீங்க பணத்தைக் குடுத்திட்டிங்கன்னா பிறகு பிரச்சினையே இராது. வாழ்க்கை முழுவதும் ஆனந்தமா இருக்கலாம்'' தாடிக்காரர் மெல்லக் கூறினார்.

நெஞ்சும், மார்பும் படக்படக் என அடித்துக் கொள்ள சுகுணா ஒரே எட்டில் வெளியே வந்தாள். 'பத்தாயிரம் ரூபாய் எதற்காக...? அந்தத் தாடிக்காரனிடம் அள்ளிக் கொடுக்கப் போகிறார் இந்த மனுஷர்? அரைக்காசு பிள்ளைக்குக் கொடுக்க மனம் வராத இவர், எதற்காக அப்படி ஒரு பெருந் தொகையை வாரி வழங்க வேணும்!''

அன்றிரவு, கணவன் வரும்வரை அவள் மனம் நிதிலும் செல்ல மறுத்தது. சாதாரண நாட்களாக இருந்தால் மாமனாரிடமே நேரடியாகக் கேட்டுவிட்டிருப்பாள். ஆனால் அன்றைய வீடியோ சம்பவத்திற்குப் பிறகு அவளால் எதையுமே கேட்க முடியவில்லையே?

தோழிகளுடன் வரவேற்பு அறையில் அரட்டை அடித்தபடி அமர்ந்திருந்தாள் சுகுணா. நரேந்திரன், அருகிலுள்ள ஓட்டலிலிருந்து டிபன் வகையறாக்களைத் தருவித்திருந்தான்.

காலையில் கோபித்துக் கொண்டு வெளியேறிய மாமனார் பிற்பகல் வீடு திரும்பும்போது, பலத்த சிரிப்பும்,

பேச்சுமாக அங்கே கலகலப்பு. மேகநாதன் காலையில் நடந்த சம்பவத்தால் பெருத்த அதிர்ச்சிக்கு உள்ளாகி விட்டிருந்தார். அதனால் அவர் வந்தவர்களை நிமிர்ந்து கூடப் பார்க்காதபடி உள்ளே செல்ல முயன்றார்.

"உன் மாமனார்தானே சுகுணா?"

"அன்னைக்கிப் பார்த்ததைவிட கொஞ்சம் நல்லாவே சுத்தமா இருக்கார். உடம்புகூட ஒரு சுத்துப் பெருத்த மாதிரி இருக்கு!" கிசுகிசுத்தாள் மற்றொருத்தி.

"சுகுணாவோட சமையல், அவருக்கு நல்லாவே தெம்பு குடுத்திருக்கு. உக்காத்தி வச்சு இன்னொரு கல்யாணம் செய்யலாம்" வேறு ஒருத்தி அடிக்குரலில் கூறவும் சிரிப்பலை பரவியது.

மேகநாதன் வெறுப்புடன் அவர்களை நிமிர்ந்து பார்த்தார். "இன்னைக்கி இவனோட அம்மா செத்துப் போன நாள்" மகனைச் சுட்டிக்காட்டினார். 'அதைக் கொண்டாடத்தான் இன்னைக்கி உங்க செலவில் படம் போட்டுக் காட்டறாங்க!" குரோதமாகக் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார்.

சட்டென ஒரு விநாடி மௌனம் நிலவியது.

கிழவரின் எதிர்பாராத தாக்குதலினால் திகைப்புற்று அப்படியே அமர்ந்து விட்டார்கள் யாவரும். நரேந்திரன் தாடை இறுகக் கோபத்துடன் தகப்பனாரைத் தேடிக் கொண்டு பின்னால் வேகமாக நடந்தான்.

"எதுக்காக அப்பா அப்படிப் பேசினீங்க? சுகுணா தோழிங்க எல்லாரும் என்ன நினைப்பாங்க?"

"என்னைப்பத்தி அவங்க என்ன நினைக்கறாங்கன்னு உனக்குத் தெரியுமா?"



"நீங்க..."

"ஸ்! பேசாதே நரேன்! ஏதோ சமையற்காரக் கிழவன்னு அவங்க அலட்சியமா பேசற அளவுக்கு உன் மனைவி இடம் குடுத்திருக்கா. நான் அப்படியெல்லாம் அடிமையா இருக்கற ஆசாமி இல்லேன்னு அவங்க புரிஞ்சு கொள்ளணும்னுதான் சொன்னேன்.

அன்று ஒரு யுத்தகாண்டம், நடந்து முடிந்த பிறகு, சுகுணா மாமனாரிடம் பேசுவதையே நிறுத்தி விட்டிருந்தாள்.

இப்போது தாடிக்காரருடன் என்ன பேச்சு வார்த்தை இருக்கும் என்ற விஷயம் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது.

இரவு பத்து மணிக்கு மேல் களைப்பும் சோர்வுமாக வீடு திரும்பிய கணவனிடம் அவள் ரகசியமாக விஷயத்தை போட்டு உடைத்தாள். அவன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாததும் அவளை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியது.

"என்ன நரேன், ஒண்ணுமே சொல்ல மாட்டேன்கிறே?' கணவனின் தோள்மீது சாய்ந்தபடி சிணுங்கினாள்.

"சுகுணா அப்பாவைப் பத்தி சிந்திக்க இப்போ நேரம் இல்லே. எங்க எம்.டி. புதுசா வந்திருக்கார்னு சொன்னேன் இல்லியா? அவரை எப்படியாச்சும் நம்ம வீட்ல ஒரு விருந்துக்குக் கூப்பிடணும்."

சுகுணா வியப்புடன், 'நம்ம வீட்லயா?" என்றாள்.

"ஆமாம், அந்த விருந்திலதான் என் பதவி உயர்வே அடங்கி இருக்குது?" சுகுணா பத்தாயிரத்தை மறந்து, பதவி நாற்காலியைத் தேடுவதில் முனைந்தாள்.

## 10

அந்த ஞாயிற்றுக்கிழமை சுகுணாவும், நரேந்திரனும் மிக்க சுறுசுறுப்பாக இயங்கினர். வீட்டில் விதம் விதமான காய்கறிகள் குவிந்தன.

சுகுணா வீட்டைச் சுத்தப்படுத்தினாள். புதிய திரைச் சீலைகளை ஜன்னல்களுக்கு இட்டு அழகுபடுத்தினாள். வரவேற்பு அறை சோபா அருகில் சிறிய முக்காலி வந்து அமர்ந்தது! அதன்மீது புத்தம்புது மெருகுடன் பித்தளைக் குத்துவிளக்குகள் காட்சி தந்தன.

''பூஜைக்காக விளக்கு ஏத்தாட்டியும், பாலிஷ் போட்டுப் பார்வையா வைக்கத் தெரியுது!'' மேகநாதன் சிரித்துக் கொண்டார்.

அவரிடம் எதுவும் கலந்து கொள்ளாமல் கணவன், மனைவி இருவருமே விருந்து கொண்டாடும் வைபவத்தை பற்றி திட்டங்கள் தீட்டினார்கள்.

''சாப்பாட்டு மேஜைல எல்லாத்தையும் வச்சிடலாம். பஃபே முறையிலே சாப்பாடு வச்சிட்டா நல்லது'' சுகுணா கூறினாள்.

''எங்க எம்.டி. வடக்கத்திக்காரர். நம்ம ஊர் இட்லி, தோசை, சாம்பார் எல்லாம் பிடிக்குமாம். அதனால, நல்லதா சட்னி, பூப்போல இட்லி, சூடா வடை, சாம்பார் எல்லாம் செய்திடு. எல்லாம் கவனமாகச் செய்யணும். ஜாக்கிரதை'' மனைவியிடம் எச்சரித்துவிட்டிருந்தான் நரேந்திரன்.



யாருக்கோ விருந்து நமக்கென்ன என்ற பாவனையில், பலமுறை வெளியே போய்வந்து கொண்டிருந்தார் மேகநாதன். சுந்தரத்துடன் பலமுறை பார்த்துப் பேச வேண்டிய விஷயங்கள் அவருக்கு.

''உங்கப்பா சும்மா அலைஞ்சுக்கிட்டே இருப்பாரு. ஒழுங்கா நல்ல துணி போட்டுக்கமாட்டாரு. வேணுமின்னு கிழிஞ்ச சட்டையை போட்டுக்கிட்டு நம்மை அவமானப் படுத்திட்டா என்ன செய்யறதுன்னு ஒரே கவலையா இருக்கு'' என்று கையைப் பிசைந்தாள் சுகுணா.

வேறு சமயமாக இருந்தால், மேகநாதனே மகனுக்கும் மருமகளுக்கும் உதவியிருப்பார். வீட்டை சுத்தம் செய்து, சமையலில் ஒரு கை கொடுத்திருப்பார். இப்போது அவர் தான் வேண்டாத விருந்தாளியா விட்டாரே? மகன் தந்தையிடம் வந்தான்.

''இத பாருங்க அப்பா. எங்க எம்.டி.யை இன்னைக்கு விருந்துக்குக் கூப்பிட்டிருக்கேன். அவர்கூட இன்னம் கொஞ்சம் ஆபீஸ்காரங்க வருவாங்க. அதனால் தயவு செஞ்சு, நீங்க வெளியே வந்து அவமானப்படுத்தற மாதிரி நடந்துக்கிடாதீங்க'' கண்டிப்பாகக் கூறி வைத்தான்.

''உங்க ஆபீஸ்காரங்க கண்ணிலே படக்கூடாது அவ்வளவுதானே'' மேகநாதன் கசப்புடன் கூறினார்.

''அதுக்காக சமையலறைப் பக்கமே வராம போயிட்டா என்க்கு...'' சுகுணா கணவனைத் தூண்டினாள்.

''சுகுணாவும், நானும் பேசிக்கிட்டே இருக்க வேண்டி வரும். அப்ப, ஏதாச்சும் அடுப்பில் இருக்கறதை கவனிச்சுக்கணும்...''

மகனது தயக்கத்தைக் கண்ட மேகநாதனுக்கு வெறுப்புடன் சிரிப்பும் வந்தது. அவனுக்கு அப்பாவைக் காட்டிலும், ஓர் உதவி ஆள் தேவை, அவ்வளவே!

"சரி!" மேகநாதன் அறையினுள் மறைந்தார்.

சிறிது நேரத்தில் வாயிற்புரத்தில் கார்களும், ஸ்கூட்டரும், ஆட்டோவுமாக ஓசைப்பட வந்து நின்றன. சுகுணா அலங்காரவல்லியாக வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருப்பது அவர் காதில் விழுந்தது.

இடை இடையே நரேந்திரன் உள்பக்கம் வந்து கண்காணித்துவிட்டு போனான். சாப்பாட்டு மேஜைமீது பீங்கான் தட்டுக்களை அடுக்கி வைத்தார் மேகநாதன். ஸ்பூன்கள், முள் கரண்டி இத்தியாதிகளையும் அழகாக வைத்தார்.

சுகுணா மேஜைமீது பளபளப்பான ஸ்டீல் பாத்திரங் களில் வைத்திருந்த டிபன், சட்னி வகையறாக்களை நோட்டம் விட்டாள்.

"எல்லாம் ரெடியா அப்பா?" நரேந்திரன் எட்டிப் பார்த்தான். மேகநாதன் தலையை அசைத்துவிட்டு அடுப்பங்கரை மேடையருகே வந்தார். அடுப்பின்மீது எண்ணெய் சட்டி புகைந்து கொண்டிருந்தது. மனமும் கூடவே புகைந்தது.

"அநியாயம்! பெற்ற தகப்பனை மற்றவர்களுக்குப் பெருமையுடன் அறிமுகப்படுத்த முடியாவிட்டாலும் போகட்டும், அடுப்படியில் எடுபிடி ஆளாகவல்லவா இருக்க வைத்துவிட்டான்?" பற்களைக் கடித்துக் கொண்டவர் சூடாக வடைகளை பொறித்து எடுத்தார்.



எம்.டி. தயாசாகர், கரகரப்பான வடைகளைக் கையிலெடுத்து ஒரு கடி கடித்தார். "எக்ஸலெண்ட் உங்க வீட்டு சமையல்காரர் ரொம்ப நல்லாவே செய்திருக்கார். ஐ லவ் இட்' நாக்கைச் சப்புக் கொட்டினார்.

இதுதான் தருணம் என்று சுகுணா எம்.டி.யின் தட்டில் மேலும் சூடான வடைகளை, சட்டினியுடன் எடுத்துச்சென்று பரிமாறினாள்.

இட்டலிகளும், வடைகளுமாக அரைமணி நேரத்தில் சாப்பாட்டு மேஜை காலியாகி, வெறும் எச்சில் தட்டுக் களின் காட்சியளித்தது. சுடச்சுடக் காப்பியைப் பருகிய படி, நரேந்திரனது எதிர்காலத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் எம்.டி. தயாசாகர். அவரது தயவைச் சம்பாதிப்பதில் கணவனும், மனைவியும் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

விருந்து முடிந்து, யாவரும் விடைபெறும் சமயம் தயாசாகர் உற்சாகத்துடன் கூறினார். "இத்தகைய அருமையான விருந்தைக் கொடுத்த உங்கள் மனைவிக்கு என் பாராட்டுதல்கள்" சற்று யோசித்துவிட்டு, "முக்கியமாக மொறுமொறுவென்று வடையை தயாரித்தாரே உங்கள் சமையல்காரர், அவரைப் பாராட்டிவிட்டுத்தான் போக வேண்டும். சமையலும் ஒரு கலை அல்லவா? எங்கே அந்தக் கலைஞர்?" என்றார் அவர்.

சுகுணா ஆடிப் போனாள். நரேந்திரன் மனைவியைப் பார்த்து விழித்து விட்டு, உள்ளே செல்ல மனமின்றி நின்றான்.

"எங்கே அவரைக் கூப்பிடுங்க" தயாசாகர் உரக்கக் கூறியதும், யாரைக் கூப்பிட்டாங்க. என்னையா?"

கேட்டபடி மேகநாதன் வெளியே வந்தார். அடுப்படியில் வேலை செய்ததால் முகத்தில் பூத்திருந்த வியர்வையை மேல் துண்டினால் துடைத்தபடி வந்தவர் ஒரு கணப் மலைப்புடன் நின்றார்.

தயாசாகர் வியப்பும் மகிழ்ச்சியுமாக, ''மிஸ்டர் மேகநாதன்! என்னைத் தெரியுதா? நான்தான் ஸாகர்'' என்று படி அவர் அருகில் ஓடோடி வந்து நின்றார். கோசல்ராம் வீட்டில் வளர்ந்த அவரது மருமகன், அக்காள் மகனா இது?

மேகநாதன் கண்களைச் சுருக்கி அவரை உற்று பார்த்தார், வியப்பினால் அவர் கண்கள் விரிந்தன. ''நீ கோசல் ராம் மருமகன் இல்லை? நீ... எங்க எப்படி இங்கே...'' தடுமாறினார். ''சின்னப் பிள்ளைல பாத்தாப் போலயே...'' நிறுத்தி விட்டார்.

''நீன்னு சொன்னா போதும். எங்க மாமா கம்பெனியை முன்னுக்கு கொண்டு வந்ததே நீங்கதான்னு எங்கப்பா அடிக்கடி சொல்வார். உங்களைப் போல ஒரு நாணயஸ்தர் கிடைச்சா, கம்பெனி எப்படிப் பெருகிப் பேரெடுக்கும்னு சொல்லிகிட்டே இருந்தாரு. அவர் கடைசி வரைக்கும் உங்களைப் பத்தியேதான் பேசினாரு.'' மனம் உருகப் பேசிய தயாசாகர் சட்டென நினைவு கூர்ந்தார். ''உங்களை மறந்தா நன்றி கொன்றதற்கு சமானம்,'' தொடர்ந்தார்.

''ஆமா இந்த வீட்டுல நீங்க... என்ன செய்திட்டிருக்கீங்க? இவர் உங்களுக்கு என்னவாகணும்?'' நரேந்திரனைச் சுட்டிக் காட்டியபடி கேட்டார் அவர்.

மேகநாதன் புன்னகைத்தார். ''தயாசாகர்! இதோ இருக்கானே நரேந்திரன் இவனுடைய அம்மா என் மனைவி. அவ்வளவுதான்.''



''என்னது? மிஸ்டர் நரேந்திரன். இவர் உங்க அப்பாவா, இவ்வளவு பெரிய மனுஷரை, எனக்கும் அறிமுகம் செஞ்சு வைக்காம...'' எம்.டி.யின் முகம் சிறுத்தது.

''எப்பேர்ப்பட்ட அநியாயத்தைச் செய்திருக்கீங்க. பெத்த தகப்பனார், அதிலும் எப்படிப்பட்ட உயர்ந்த மனிதர்! அவரைக் கால் செருப்பைவிடக் கேவலமா...'' உணர்ச்சி வசப்பட்டவராய், என்னையாவது ஆசீர்வாதம் செய்யுங்க அப்பா!'' என மேகநாதன் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார்.

சற்று நேரத்தில் நரேந்திரனிடமோ, சுகுணா விடமோ முகம் கொடுத்துப் பேசாதவராய் தயாசாகர் திரும்பிப் போய் விட்டார்.

அன்றிரவு முழுவதும் வீட்டில் எவருமே தூங்க வில்லை. அந்தக் கசப்பான சம்பவத்திற்குப் பிறகு மேகநாதனும் தன் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி விட்டிருந்தார்.

இனி மகனிடமிருந்து நிரந்தரமாகப் பிரிய வேண்டியதுதான் என்ற தீர்மானத்திற்கு வந்திருந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து ஒரு நாள் பிற்பகல் நரேந்திரன் பதறிக்கொண்டு வந்தான். ''அப்பா! அப்பா!'' அவனுக்குப் பின்னால் சுகுணாவும் அடக்கமாக நின்றிருந்தாள்.

''அப்பா, என்னை மன்னிச்சிடுங்க, உங்க பெருமை தெரியாம உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்தி விட்டோம்'' சுகுணா கண்களில் நீர் வடிய ஆரம்பித்தது.

''எதற்காக இந்தப் புதுத் திருப்பம்?'' குழப்பத்துடன் மகனைப் பார்த்தார் மேகநாதன். ''அப்பா! எனக்கு ஆபீஸ்ல

ஒரு பிரமோஷன் வர இருந்தது. அன்னைக்கி வந்தாரே எம்.டி. தயாசாகர் அவர் மனசு வச்சாத்தான் எனக்குப் பதவி உயர்வு கிடைக்கும். ஆனா...'' வார்த்தைகள் தடுமாற நரேந்திரன் தத்தளித்தான்.

''நீங்க ஒரு வார்த்தை சொன்னாத்தான் உங்க மகனுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்'' சுகுணா அரற்றினாள்.

''அப்படியா? நரேந்திரன் வேலையில் ரொம்பக் கெட்டிக்காரனாச்சே. பதவி உயர்வு தன்னால் கிடைச் சிருக்குமே?'' கிண்டல் தொனிக்க மேகநாதன் பேசினார்.

''பதவி உயர்வு கிடைச்சிருக்கும். ஆனா, அன்னைக்கி உங்களை இங்கே பார்த்த பிறகு... ரொம்பக் கோபமாக இருக்கார் அப்பா! ப்ளீஸ்! எனக்காக... ஒரு போன் செய்யுங்க போதும். என் எதிர்காலம் உங்க கையில் தானப்பா இருக்கு'' நரேந்திரன் மன்றாடினான்.

''மாமா! நடந்ததையெல்லாம் மறந்திடுங்க. இனிமே நாங்க உங்களை நல்லாக் கவனிச்சுக்கறோம்.''

மேகநாதன் உரக்கச் சிரித்தார். ''சுகுணா! உன் புருஷன் என் மகன். அந்தக் கடமைக்காக தயாசாகருக்குப் 'போன்' செய்திடறேன். என்னால எந்தவிதமான பதவி உயர்வும் அவனுக்கு வராமல் போகக் கூடாது. கவலைப் படாதே!''

''அப்பா!'' நரேந்திரன் விழிகளில் நீர் பளபளத்தது.

''ஆனால்... இனிமேல் என்னைக் கவனிச்சுக்கிற சிரமத்தை உங்களுக்கெல்லாம் நான் தரமாட்டேன்.''

''என்னப்பா சொல்றீங்க?'' நரேந்திரன் பதறிப் போனான்.



''பல நாளா யோசிச்சு செய்த முடிவுதான். கிராமத்தில் ஒரு சிறு தோட்ட வீட்டை நாங்கள் நாலைந்து [illegible]வங்க சேர்ந்து வாங்கியிருக்கோம். என் பங்குக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டேன். சுந்தரம், [illegible] கூட நாலைந்து பேர்கள் வயதுக்காரர்கள் [illegible] எல்லோருமாகச் சேர்ந்து நிம்மதியாக இருப் போம். சமையல் கலைதான் எனக்குக் கைவந்த கலை [illegible], மத்தவங்க ஆளுக்கு ஒரு வேலையாய் பகிர்ந்து கொண்டு செயல்படறதா தீர்மானம் செய்திட்டோம். அதனால் இனிமே இந்தக் கிழவன் தொல்லை உங்களுக்கு இராது'' என்றார்.

''அப்பா!'' என்ற நரேந்திரன் சிறு குழந்தையைப் போலத் தேம்பி அழலானான். அந்தக் கண்ணீருக்குக் [illegible] கூடாது என மனத்தை மேகநாதன் திடப்படுத்திக் கொண்டார்.

★-★-★